விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–02 | 16–06–2004 | புதன்கிழமை | ஓசை –119




## வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கான

# மனிதாபிமான வேலைத்திட்டங்கள் ஒருங்கிணைப்பு; புலிகள்–அ.சா.நி. பிரதிநிதிகள் கூடி ஆராய்வு

### கிளி.யில் நேற்று நடந்த சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

**எமது தாயகப் பிரதேசத்தில் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற ஐ.நா. அமைப்புக்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து இங்குள்ள மக்களின் உள்ளூர் ஸ்தாபனங்களுடன் இணைந்து மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் பற்றி இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்டது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை வட-கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு மனிதாபிமானப் பணிபுரிகின்ற 24இற்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை கிளிநொச்சியில் அமைந்துள்ள திட்டமிடல் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்,

☐ இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் என்ன?

(12ஆம் பக்கம் பார்க்க)



அரசசார்பற்ற அமைப்புகளுடனான சந்திப்பு

## நோர்வேத் தூதுவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்பிறஸ்கர் அவர்கள் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை இன்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்த வுள்ளார்.

காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி வந்தடையும் இவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்திற்குச் சென்று அங்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்த வுள்ளார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதர் கான்பிறஸ்கருடன் இரண்டாவது தூதரக அதிகாரி செய்றி துறும்சனும் வருகைதரவுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் படையினரின் அடாவடியை கண்டித்து நேற்று பூரணஹர்த்தால்

(மன்னார்)

மன்னார் நகரப்பகுதியில் வைத்து இரு பெண்போராளிகளைச் சோதனையிட முயன்றமை, பொது மக்கள் சிறிலங்காப்படையினரால் தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களைக் கண்டித்து மன்னாரில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் சிறிலங்காப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

பேருந்துகள் எவையும் ஓடவில்லை. இதனால் வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக்காணப்பட்டன. மொத்தத்தில் மன்னார் முழுவதுமே வெறிச்சோடிக்காணப்பட்டது. சிறிலங்காப்படையினரின் மேற்படி நடவடிக்கைக்கு மக்கள் ஒருமித்த எதிர்ப்பைக் காட்டும் வகை

(12ஆம் பக்கம் பார்க்க)

-வடமராட்சி நாகர்கோவில் கடற்பரப்பில்-

## மீன்பிடிப்படகுகள்மீது படையினர் கரையிலிருந்து துப்பாக்கிச்சூடு

வடமராட்சி கிழக்கின் நாகர்கோவில் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட படகுகள் மீது கரையிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நண்பகல் வேளையிலேயே கரையோரக் காவலரண்களிலிருந்து படகுகள் மீது இத்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருகையில் வடமராட்சி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள், வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகள் மூலம் சென்று வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் அண்மைக்காலமாக மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள்.

வடமராட்சி வடக்கைச் சேர்ந்த மீனவர்கள், நாகர்கோவிலில் இராணுவத்தளத்தை தாண்டியே கடற்பரப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீதியால் சென்றவரை மோதிவிட்டு மீன் ஏற்றிய வாகனம் ஓடிமறைந்தது

### - செட்டிகுளத்தில் குடும்பஸ்தர் பலி

(செட்டிகுளம்)

செட்டிகுளத்தில் கடந்த திங்களன்று இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். மன்னாரிலிருந்து வந்த மீன் ஏற்றிய வாகனம் ஒன்று செட்டிகுளம் பகுதியில் வீதியின் ஓரமாகச் சென்ற ஒருரை மோதிவிட்டு நிறுத்தாமற் சென்றுள்ளது.

வீதியில் கிடந்தவரை அவ்வழியால் சென்றோர் கண்டு, வவுனியா பொது மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் மரணமானார்.

முதலியார்குளம் பகுதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய கண்டனப் பேரணிக்கு முழுவீச்சில் தயாரிப்பு நடவடிக்கை

(வடமராட்சி)

யாழ். நகரப்பகுதியில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள கண்டன பேரணிக்கான முன்னேற்பாடுகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன கண்டனப் பேரணியில் பொது மக்களது பங்களிப்பைக் கோரும் வகையிலான தெருக்கூத்து நிகழ்வுகள் குடாநாட்டின் பலபகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வணிகர் கழகங்கள்,மீனவர் சங்கங்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் எனப் பல்வேறு பொது நிறுவனங்களிடையேயும் கண்டனப் பேரணிக்கு ஆதரவாகக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதனிடையே யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், தமிழர் ஆசிரியர் சங்கம், அரசசார்பற்ற நிறுவனங்கள் எனப் பலதரப்பட்ட தரப்புகளும் இக்கண்டனப் பேரணிக்குத் தமது ஆதரவை நல்கியுள்ளன.

நல்லூர் ஆலய முன்றலிலிருந்து காலை 10.00மணிக்கு ஆரம்பமாகி யாழ். செயலகம் வரை நடாத்தப் பெறவுள்ள இக்கண்டனப் பேரணியில் சுமார் ஒரு இலட்சம் பொது மக்கள் வரையில் திரள்வரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை குடாநாட்டின் அனைத்துப்பகுதியிலிருந்தும் வாகனங்களில் வருகை தரும் பொதுமக்கள் குழும வேண்டிய

(12ஆம் பக்கம் பார்க்க)

### குடும்பஸ்தர் தற்கொலை

(அலுவலக செய்தியாளர்)

மதுபோதையில் குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினமிரவு உருத்திரபுரம் டி 10 கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக மேற்படி நபர் மதுபோதையில் கிணற்றில் குதித்ததாகவும் இதனை அறிந்த அயலவர்கள் கிணற்றிலிருந்து அவரை மீட்க எடுத்த முயற்சிகள் பயனா

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் படையினரால் கைதான இளைஞர் குறித்துத் தகவலில்லை

(மன்னார்)

கட்டுக்கரைக்குளம் அருகில் உள்ள அடைக்கலமோட்டை சூசைப் பிள்ளையார் கோயிலுக்குள் நின்ற இளைஞர் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். கடந்த 5ஆம் திகதி கைதான இவர் இன்னமும் விடுதலை செய்யப்படாமையைக் கண்டித்து இவரது பெற்றோர் மன்னார் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறையிட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்; மேற்படி சூசைப் பிள்ளையார் கோயிலுக்குள் நின்றவர்களான சிறுகுளத்தைச் சேர்ந்த யலசிங்க யூட்டைலின் (வயது24), பிரம்மாங்கண்டல் என்னுமிடத்தைச் சேர்ந்த திலகன் (வயது 30), அடைக்கல மோடடையைச் சேர்ந்த தொம்மை (வயது 30) ஆகிய மூவரையும் இராணுவத்தினர் கைது செய்தனர். இதன் போது திலகன், தொம்மை, ஆகிய இருவரையும் அடித்துத்துரத்திவிட்டு யலசிங்க யூட்டைலின் என்பவரைக் கைது செய்துள்ளனர். பின்னர் இவருக்கு என்ன நடந்தது என்று இதுவரையும் தெரியவரவில்லை. இதனையடுத்து பெற்றோர் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளனர். அத்துடன் இது போர்நிறுத்த மீறல் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (மி)

## வரிவிளம்பரம்

### O/L விண்ணப்பப்படிவம்

க.பொ.த.சா.தரப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் சகல அறிவமுது பொத்தகசாலையிலும் கிடைக்கும். (4704)

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்பு

யூலையில் நடைபெறவுள்ள பரீட்சைக்கான வகுப்புக்கள் 18.06.2004 வெள்ளி 2.00 மணிக்கு கிளி. புதிய உயர் கல்வி நிலையத்திலும் (பழைய புகையிரத நிலையவீதி), மாலை 4.15இற்கு 275 சில்வாவீதி, வட்டக் கச்சியிலும் நடைபெறுகின்றது. (4708)

### சாரணர் வேலை வாரம்

கிளிநொச்சி சாரணர் மாவட்ட கிளைச் சங்கத்தின் சேவைவாரம் தொடர்பாக வேலைவாரம் 19.06.2004 முதல் 27.06.2004 வரை நடைபெற இருக்கிறது. இவர்களுக்குரிய பற்றுச்சீட்டுப் புத்தகம் இன்று பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், நாளை பி.ப.2.00 மணிக்கு பளை மத்திய கல்லூரியிலும், கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் சாரண ஆசிரியரிடம் வழங்கப்படும் என்று சாரணர் மாவட்ட ஆணையாளரும் சாவகச்சேரி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறியத்தருகின்றார்.

# பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன தலைமைக்காரியாலயக் கட்டடத் திறப்புவிழா

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு திட்டப்பணிப்பாளர் கமலா தலைமையில் ஆரம்பமாகியது.

பொதுச்சுடரினை கப்டன் வளர்மதி, மேஜர் நாதன் ஆகியோரின் தாயாரும், மேரி டில்லி றெஜினா, அன்னை இல்லப் பணிப்பாளர் றெஜினோல்ட் அடிகளார் அவர்களும் ஏற்றி வைக்க தேசியக்கொடியினைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். நிறுவனக்கொடியினைப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுதர்சினி ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து, புதிய கட்டடத்தை சர்வதேச தொழிலாளர் நிறுவனப் பணிப்பாளர் குளோடியா அவர்கள் நாடாவை வெட்டித்திறந்து வைத்து உரையாற்றினார். தொடர்ந்து யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி கேற் அவர்களும், யுனிசெவ் பிரதிநிதி கிளாரி அவர்களும் அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி அவர்களும், அன்னை இல்லப்பணிப்பாளரும் உரையாற்றினார்கள். உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




# கிளி. மாவட்ட வைத்தியசாலையில் பெண் நோயாளர் விடுதி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பெற்ற பெண்நோயாளர் விடுதி நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பெற்றது.

வைத்திய கலாநிதி யூடிரமேஸ் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண் தமிழீழ தேசியக் கொடியினையும் பொதுச்சுடரினையும் ஏற்றிவைத்தார்.



மங்கலவிளக்கினை கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் ஏற்றிவைத்தார். பெண் நோயாளர் விடுதியினை யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி அன்சர் சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார்.

தலைமையுரையினையடுத்து வரவேற்புரையினை கிளி.மாவட்ட பதில் பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் தவராசா நிகழ்த்தினார்.

தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண்,கிளிமாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம்,யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி அன்சர். போரூட் பிரதிநிதி அனே ஆகியோர் உரைநிகழ்த்தினர். நன்றியுரையினை வைத்தியகலாநிதி பிறைற்ரன் வழங்கினார்.

போரூட் கருத்திட்டத்தின் கீழ்,யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மேற்படி விடுதி அமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ


# சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு ஊனமுற்றோருக்கு சக்கரநாற்காலி வழங்கல்

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினரால் நேற்று கிளிநொச்சியில் 08 பயனாளிகளுக்கு முச்சக்கரவண்டிகளும், சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையில் யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவான பயனாளிகள் 08 பேருக்கு முச்சக்கரவண்டியும் ஒரு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது.

இதேநாளில் யாழ்ப்பாணத்தில் 10 பயனாளிகளுக்கும், திருகோணமலையில் 10 பயனாளிகளுக்கும், புதுக்குடியிருப்பில் 10 பயனாளிகளுக்கும் முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டதாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை மன்னார் அடம்பன் பிரதேசத்திலுள்ள வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவனத்திலும் 08 பேருக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (லோ,ச,தீ,மி)



கிளிநொச்சியில்

# நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட குளங்கள் கையளிப்பு நிகழ்வு

(ஒட்டுசுட்டான்)

முல்லை.மாவட்டத்தில் நியாப் திட்டத்தால் புனரமைக்கப்பட்ட குளம், பொதுநோக்கு மண்டபம், மையக்கிராமங்கள், வீதிகள் என்பன அக்கிராம மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



அபிவிருத்தி செய்யப்பட்ட ஒலுமடுகுளம் குறித்த சான்றிதழைப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம அவர்கள் ஒலுமடு கமக்காரர் அமைப்புத் தலைவரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வு நேற்றுக்காலை 10.30 மணியளவில் முல்லை.மாவட்ட நியாப் திட்ட பிரதிப்பணிப்பாளர் எந்திரி எஸ்.எஸ் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து கருத்துரைகளை வன்னி.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சு.மதன்ராஜ், முல்லைமாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், திருகோணமலை நியாப் திட்ட முகாமைத்துவப் பிரிவைச் [illegible]ந்த ஜெகநாதன், வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் வே.சிவனடியார், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பொறுப்பாளர் சி.குகன், ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் திருமதி. ந.செல்வராசா, கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்கள்,மாதர் சங்கத் தலைவர்கள், கமக்கார அமைப்பின் தலைவர்கள், முல்லை.மாவட்ட உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் ஆகியோர் வழங்கினர்.

இதில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட குளங்கள், வீதிகள், பொது மண்டபம், கிராமங்கள் என்பன கையளிப்பு நடைபெற்றது. (05)

# தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த மாதம் 15407 பேருக்குச் சிகிச்சை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த மே மாதம் 15407 பேருக்குச் சிகிச்சை வழங்கப் பட்டது. இதில் திலீபன் மருத்துவ சேவை நிலையங்களான கற்சிலைமடுவில் 2290 பேருக்கும், புங்குடுதீவில் 2210 பேருக்கும், பூநகரியில் 1968பேருக்கும், புளியங்குளத்தில் 1557 பேருக்கும், அளம்பிலில் 1501 பேருக்கும், ஆழியவளையில் 1477 பேருக்கும், மாங்குளத்தில் 1415 பேருக்கும், ஐயன்குளத்தில் 1210 பேருக்கும், அடம்பனில் 1113 பேருக்கும், நைனாமடுவில் 766 பேருக்கும் சிகிச்சைகள் வழங்கப் பட்டது.

இவற்றுள் வைரஸ் காய்ச்சலினால் 2401பேரும், சுவாசப்பாதைத் தொற்றினால் 2616பேரும், குடற்புழுத் தொற்றினால் 1920 பேரும், காயங்களினால் 1617பேரும், தோல்நோயினால் 663பேரும், தொய்வினால் 251பேரும், மலேரியாக்காய்ச்சலினால் 214 பேரும், பல்நோயினால் 251பேரும், வயிற்றோட்டத்தினால்228பேரும், குருதிச்சோகையினால் 227பேரும், குடற்புண்ணினால் 233பேரும், உயர் குருதியமுக்கத்தினால் 310பேரும், நாய்கடியினால் 164பேரும், சிறுசீரகத் தொ[illegible]றினால் 148பேரும், நெருப்புக்காய்ச்சலினால் 78 பேரும், வ:லிப்பினால் 61பேரும், பாம்புக் கடியினால் 27பேரும், மண்டைபீனிசத்தினால் 382பேரும், சத்துக்குறைபாட்டினால் 283பேரும் உட்பட மொத்தமாக 15407 பேர் உள்நோயாளர்களாகவும் வெளி நோயாளர்களாகவும் சிகிச்சை பெற்றுள்ளார்கள். அத்தோடு இம் மருத்துவ சேவை நிலையங்களை அண்டியுள்ள பகுதிவாழ் மக்களிற்கு சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல்கள் வழங்குவதோடு நடமாடும் மருத்துவ சேவையையும் மேற்கொண்டு நோயாளர்களைப் பார்வையிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கூட்டம் நடைபெறாது

நாளை மு.ப. 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவிருந்த மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் கிளி.மாவட்ட அரச அதிபர் அறியத் தருகிறார்.


## கிளி.கிளிநொச்சி மகாவித்தியாலயம்

## தரம்1 மாணவர் அனுமதி 2005

2005 ஆம் ஆண்டில் தரம் 1இல் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. 30-06-2004 இன் முன்னர் விண்ணப்பங்களை பாடசாலையில் ஒப்படைக்கவும். விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,
கிளி/கிளிநொச்சி ம.வி,
கிளிநொச்சி.

(சி-9725)

# ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதல் தொடரின், தடுக்க அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்வோம்

**ஈராக்கில் அதிகரித்துவரும் தாக்குதல்கள் குறித்து அமெ.அமைச்சர் கொலின்பவல்**

(பாக்தாத்)

**ஈராக்கில் தீவிரவாதிகள் தாக்குதல்களை இனித் தொடர்ந்தால் அமெரிக்கா அதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயாராகவுள்ளது.**

இவ்வாறு வோஷிங்டனில் நேற்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் எச்சரிக்கை செய்துள்ளார்.

ஈராக்கின் இடைக்கால அரசு ஈராக்கியர்களிடமே ஒப்படைக்கப் படவுள்ளது. என்று ஐ.நா.சபையில் அமெரிக்காவும், பிரிட்டனும், தீர்மானம கொண்டுவந்த பின்னரும் ஈராக்கில் தாக்குதல்கள் தொடர்வதனையடுத்தே அமெரிக்கா இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளது.

நேற்று முன்தினம் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்துள்ள அமெரிக்கா, தாக்குதல்கள் ஈராக்கில் தொடருமானால் தடுப்பதற்கு அமெரிக்கா சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று தீவிரவாதிகளுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை பாக்தாத்தில் தற்கொலைக் குண்டுதாரியின் கார்க்குண்டு வெடிப்புத் தாக்குதலில் நான்கு ஈராக்கியப் பொலிசார் உட்பட 12பேர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுதாரியின் கார்க் குண்டுவெடிப்புத்தாக்குதலில் அமெரிக்கக் கம்பனி ஒன்றில் பணியாற்றிவரும் அமெரிக்கா, பிரிட்டன், பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் ஐவர் உட்படப் 16 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 50இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

அதுமட்டுமல்ல சவுதிஅரேபியாவிலும் அமெரிக்காவுக்கெதிரான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அமெரிக்கப் பொறியியலாளர் ஒருவர் கடந்தவாரம் அவரது வீட்டில் இருந்து வெளியில் வந்த வேளை இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். மற்றுமொரு அமெரிக்கப் பொறியியலாளர் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

## சதாம் ஒப்படைக்கப்படுவார்

(பாக்தாத்)

ஈராக்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசிடம் இம்மாத இறுதியில் அமெரிக்கக் கூட்டுப்படை நிர்வாகத்தை ஒப்படைக்கும்போது சதாம் ஹுசைன் உட்பட ஈராக்கியக் கைதிகளும் புதிய அரசிடம் ஒப்படைக்கப் படுவார்கள் என இடைக்கால அரசின் பிரதமர் கூறியுள்ளார்.



ஆபிரிக்க நாடான போர்ட் ஒப் பிறின்ஸில் மூன்று வாரங்களுக்கு முன் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்கள் உலக உணவு ஸ்தாபனத்தின் உணவுப்பெட்டலத்தைப் பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருக்கின்றனர்.

# பலஸ்தீனரின் 4500 ஏக்கர் நிலப்பரப்பு இஸ்ரேலியப்படையினரால் அபகரிப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீன மேற்குக்கரையில் தமது விளைநிலங்கள் 4500 ஏக்கரைத் தடுப்புச் சுவர் அமைப்பதற்காக ஸ்ரேல் கையகப்படுத்தியதாக பலஸ்தீன மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் செய்த பலஸ்தீன மக்களை இஸ்ரேல் இராணுவம் தடுத்ததையடுத்து இருதரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதன்போது பலர் காயமடைந்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டம் செய்த பலஸ்தீன மக்களைக் கலைப்பதற்காக இஸ்ரேல் இராணுவம் கண்ணீர்ப் புகைக்குண் டுகளை வீசியதில் பலஸ்தீனர்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் தீவிரவாதிகளின் திடீர்த் தாக்குலைத் தவிர்க்கத் தடுப்புச் சுவர் அமைப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இந்தத் தடுப்புச்சுவர் அமைப்பதற்காக மேற்குக் கரையில் 4500 ஏக்கர் நிலத்தை இஸ்ரேல் கையகப்படுத்தியதாக அறிவித் துள்ளது. இதனையடுத்தே பலஸ் தீனர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.



4வருடங்களுக்குப் பிறகு நடைபெறும் ஆசிய-பசிபிக் சமாதான மன்றத்தின் கூட்டத்தின் போது உரையாற்றும் வடகொரியாவின் உறுப்பினர் (பிரதித் தலைவர்) ரி-ஜோங்-ஐயக்கும் அதனை அவதானிக்கும் தென்கொரிய சனாதிபதி
றோ-மூகயுன், முன்னாள் சனாதிப்தி கிம்-டயே-யங் ஆகியோரும்.

# அபுகிறாய் சிறையிலிருந்து 585 பேர் அமெ.படையினரால் விடுதலை

(பாக்தாத்)

ஈராக்கில் அபுகிறாய் சிறைச்சாலையிலிருந்து 585 ஈராக்கியக் கைதிகள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சதாம் ஹுசைன் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்னர் ஏராளமான சதாம் ஹுசைன் ஆதரவாளர்கள் அமெரிக்கக் கூட்டுப்படையினரால் பிடிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

இந்த வகையில் 6000 இற்கும் மேற்பட்டவர்கள் கைதிகளாக அபுகிறாய் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

தற்போது சிறைக் கைதிகள் ப்டிப்படியாக விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் 585 ஈராக்கிய சிறைக்கைதிகள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று பேருந்துகளில் இவர்கள் தமது சொந்த ஊருக்கு நேற்று முன் தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஈராக்கிய கைதிகளை அமெரிக்க கூட்டுப்படை விடுதலை செய்வதற்குக் காரணம் அபுகிறாய் சிறைச்சாலை தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சைகள்தான் என்றும் கூறப்படுகின்றது.




மேற்குக்கரை நகரான தேப்ளஸ்க்கு அண்மையிலுள்ள அகதிமுகாம் அருகே இஸ்ரேலிய இராணுவத்தின் எறிகணைத்தாக்குதலுக்குள்ளாகிச் சேதமான வாகனம்

# சியா முஸ்லிம் ஆன்மீகத்தலைவரது சகா அமெ.படையினரால் கைது

(பாக்தாத்)

அமெரிக்கத் துருப்புக்கள் ஈராக்கின் சியா ஆன்மீகத் தலைவரது சகா ஒருவரைக் கைது செய்துள்ளனர்.நேற்று முன்தினமிரவு நஜாப் என்னும் புனித நகரில் இடம் பெற்ற திடீர் சோதனையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆன்மீகக் கிளர்ச்சியாளரது படையணி இரண்டரை மாதங்களுக்கு முன்னர் கூட்டணித் துருப்புக்களுக்கெதிராக கிளர்ச்சியைத் தொடங்கியிருந்தது. ஆனால் சியா மதத்தலைவர்கள் கொடுத்த அழுத்தங்களையடுத்து நஜாப், கர்பலா நகர்களில் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க ஆன்மீகக் கிளர்ச்சியாளரது படையணி (அந்த அமைப்பு) இணக்கம் தெரிவித்தது.



தாக்குதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த நேபாள மாவோ தீவிரவாதி ஒருவர் அந்நாட்டு இராணுவ வைத்தியசாலையில் பராமரிக்கப்படுகின்றார்.

# இஸ்லாமிய நாடுகள் அணுவாயுதங்களை விரைவாகத் தயாரிக்க வேண்டும்


**-இது தனது ஆசை என்கிறார் இந்திய வர்த்தகப் பிரமுகர்**

இஸ்லாமிய நாடுகள் அணுவாயுதங்களை விரைவாகத் தயாரிக்க வேண்டும் எனும் ஆர்வம்காரணமாகத்தான் டுபாய் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன் இதுவொரு நல்லெண்ண முயற்சியே ஆகும்.

இவ்வாறு இந்திய அணுவாயுத இரகசியங்களை ஐக்கிய எமிரேட்டின் நேசநாடுகளிடம் விற்க முயன்றாதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள அக்தர் குஷேன் அகமட் கூறியுள்ளதாக இந்திய மத்திய புலனாய்வுத் தகவல்கள் கூறியுள்ளன.

கடந்த மூன்று நாட்களாக மத்திய புலனாய்வு துறையினர் இந்த வர்த்தகப் பிரமுகரிடம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இதன் போதே இந்த வர்த்தகப் பிரமுகர் இந்தியாவின் அணுவாயுதங்களை கடத்திச் செல்லவில்லை என்றும் தன்னிடம் எவ்விதமான அணுவாயுத இரகசியங்களுமே இல்லை என்றும் கூறியுள்ளார்.



காந்த சக்தியால் இயக்கப்படும் புகையிரதம் யப்பானில் பரீட்சார்த்தமாக ஓடிப்பார்க்கப்படுகிறது.

# எமது மக்களின் நிம்மதியான வாழ்விற்காக நாம் பொறுமை காத்து நிற்கின்றோம்!

- திருமலை அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன்

(திருமலை)

**"சமாதான காலத்தில் நாம் 33போராளிகளை இழந்துள்ளோம். இதன் மத்தியிலும், எமது மக்களுக்கு நிம்மதி, நிரந்தர சமாதானம் கிடைக்கவேண்டும் என்பதற்காக நாம் பொறுமை காத்து நிற்கின்றோம்" இவ்வாறு திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.**

மூதூர் கிழக்கு ஆலங்குளம் மாவீரர்துயிலும் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கடற் கரும்புலி மேஜர் புகழினியின் நினைவுக்கல் திரை நீக்க நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே இதனைத்தெரிவித்தார்.

30.07.2003 அன்று சர்வதேசக் கடலில் இடம்பெற்ற படகு விபத்தில் மேஜர் புகழினி வீரச்சாவடைந்தார். ஞாயிறு பிற்பகல் அன்னாரது திருவுருவப்படம், அன்னாரது இல்லத்தில்இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு இலங்கைத்துறை முகத்துவாரம் அ.த.க பாடசாலையில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது . திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரை மேஜர் புகழினியின் தாயார் திருமதி. வடிவேல் ஏற்றி, மலர் மாலை அணிவித்தார். பின்னர் நினைவுக்கல்லையும் அவர்திரைநீக்கம் செய்து வைத்தார்.

மூதூர் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. பொதுச்சுடரை திருமலை மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி யாழிசை ஏற்றினார். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. எழிலன் பேசும்போது மேலும் கூறியதாவது, "யுத்தகாலத்திலும் பல போராளிகளை இழந்துள்ளோம். சமாதான காலத்திலும் நாம் 33போராளிகளை இழந்துள்ளோம். எமது மக்களுக்கு நிலையான, நிரந்தர சமாதானம் கிடைக்கவேண்டும் என்பதற்காக இந்த இழப்புக்களுக்கு மத்தியிலும் பொறுமை காத்து வருகின்றோம்.

சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சனாதிபதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, தற்போதைய சமாதானப்பேச்சுவார்த்தையின் இழுபறி நிலைக்குக் காரணம் விடுதலைப்புலிகள் மீது தாம் கொண்டுள்ள நம்பிக்கையீனமே என்று சனாதிபதி தெரிவித்துள்ளார். அவர்ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். எத்தனையோ கடற் கரும்புலிகள் மற்றும் கடற் புலிகளின் இழப்புக்கள் மத்தியிலும் நாம் யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடித்து பொறுமை காத்து நிற்பது நாம் சமாதானத்தின் மீது கொண்டுள்ள ஆழமான பற்றுறுதியை எடுத்துக் காட்டுகின்றது. இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் சி. தயாபரன்,கடற்புலிகள் கிழக்குப் பிராந்தியப் பொறுப்பாளர் சிறிராம்,திருமலை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் சிவா ஆகியோரும் கலந்து கொண்டனர். (25)

## சிரமதானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு உதய சூரியன் விளையாட்டுக் கழகம், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம், புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பன இப்பகுதிக் கிராம மக்களாலும் விளையாட்டுக் கழக உறுப்பினர்களாலும் சிரமதானப்பணி மூலம் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.(15)

## வர்த்தக நிலையங்கள் அருகே கழிவுப்பொருட்கள் தேக்கம்!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியிலுள்ள வணிக நிலையங்கள் பலவற்றிற்குப் பின்புறமாகவும் பக்கமாகவும் சுகாதாரத்திற்குச் சீர்கேடான முறையில் கழிவுப்பொருட்கள் அகற்றப்படாமல் உள்ளதை அவதானிக்கமுடிவதாகப் புதுக்குடியிருப்புப் பொது சுகாதார பரிசோதகர் கூறுகின்றார்.

இதனால் ஈக்கள்,நுளம்புகள் பெருக்கம்ஏற்பட வாய்ப்புண்டு இதன் விளைவாக நோய்கள் பரவுவதற்குக் கடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பதாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8)

## முல்லை. வட்டுவாகல் பாலத்தில் வாகனம் வீழ்ந்து சாரதி படுகாயம்

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் பிக்கப்ரக வாகனம் ஒன்று வீழ்ந்ததில் சாரதி படுகாயம் அடைந்துள்ளார். சிதம்பரநாதன் (வயது45) என்பவரே காயமடைந்தவராவார். இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக வாகனச் சாரதி கருத்துத் தெரிவிக்கையில்,கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத்தீவிற்குச் செல்லும்போது வட்டுவாகல் பாதையில் வாகனத்தின் சில்லுகாற்றுப்போனமையால் திடீரெனப் பாலத்தினுள்தூக்கி வீசப்பட்டதாக தெரிவித்தார். முல்லை. காவல் பணிமனையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (20)

## முல்லை.மாவட்ட மாதாந்தக் கூட்டத் திகதி மாற்றம் குறித்து அறிவிப்பு

முல்லை.மாவட்ட அரசாங்க அதிபரின் மாதாந்தக் கூட்டத் திகதி தவிர்க்க முடியாத காரணத்தினால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவிருந்த இவ் அனைத்துக் கூட்டங்களும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளதாக முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகள், நிவாரணம்வழங்கல் ஒருங்கிணைப்புக், குழுக்கூட்டம் 23ஆம் திகதி காலை 10.00மணிக்கும், சமுதாய அபிவிருத்தித்திட்டம், வீடமைப்புத்(NECORD) திட்டம், தொடர்பானகூட்டம் நண்பகல்11.00மணிக்கும், சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மு.ப.1.00மணிக்கும் நடைபெவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் (20)

## கிளி. பாரதிபுரம் கிராமத்திற்கு பழமரக்கன்றுகள் விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

டாகிட் எனும் விவசாய நிறுவனத்தினர் கிளிநொச்சி பாரதிபுர கிராம மக்களுக்கு பழமரக்கன்றுகளை வழங்கியுள்ளனர்.

நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அபிவிருத்தி செயற்பாட்டை மேற்கொண்டு வரும் பாரதிபுரம் கிராமத்திற்கு மேலதிகமாக கிராம முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் பழமரச்செய்கையில் ஈடுபடும் அக்கிராம மக்களில் பலருக்கு முதற்கட்டமாக பெறுமதி வாய்ந்த பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இந்நிகழ்வில் 168 பயனாளிகளுக்கு5000 அன்னாசிக் கன்றுகளும், 318 பயனாளிகளுக்கு 1110 கொடித்தோடை (பசன் புறுட்)கன்றுகளும்100 பயனாளிகளுக்கு 100 பப்பாசிக் கன்றுகளும் வழங்கப்பட்டன. இவை விவசாய நிறுவனத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. நிகொட்டின் அடுத்த கட்ட அபிவிருத்தித் திட்டத்திற்காக கிளி. மாவட்டத்தில் தெரிவாகியுள்ள 5 கிராமங்களுக்கு மேலும் பல வகையான பழமரக்கன்றுகள் அன்பளிப்பாகத்தாம் வழங்கத் தயாராக இருப்பதாக டாகிட் விவசாய நிறுவனத்தினர் வாக்குறுதியளித்தாக தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் இராஜன் தெரிவித்தார். (ச)

## வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலை மாணவரிடையே போசாக்குக் குறைபாடு

### காலை உணவின்றி பலர் வருகை

(அலுவலகசெய்தியாளர்)

மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களிடையே பெரும் போசாக்கு குறைபாடு நிலவிவருவதாகப் பாடசாலைப் பிரதி அதிபர் திருமதி.பீ.டி எட்வின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மேற்படி பாடசாலை 1999ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக தமது சொந்த இடத்தில் இருந்து இடம்பெயர்ந்தது. இதனால் அப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்தனர். இவ்வாறான இடம்பெயர்வுகளின் காரணமாக அப்பகுதி மக்களின் பொருளாதார நிலையில் தாழ்வு ஏற்பட்டது. இடம்பெயர்ந்து சென்று மக்கள் தமது அன்றாட வாழ்வை கொண்டு நகர்த்த முடியாத நிலை உருவானது. பின்னர் மீண்டும் 2002ஆம் ஆண்டு சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்தனர். இதனால் பாடசாலையும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. இந்த நிலையில் 480 மாணவர்கள் இந்தப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். இவர்களில் பெருமளவானவர்களின் பொருளாதார நிலை மோசமாகவே உள்ளது.

இதனால் பாடசாலை வரும் மாணவர்களில் பெருமளவானவர்கள் காலை உணவைக்கூட உட்கொள்ளாது தான் பாடசாலைக்கு வருகிறார்கள்.இதனால் அவர்கள் பல்வேறுபட்ட உடல் நலக்குறைவு நோய்களுக்கு உள்ளாகின்றனர்.அதனால் அவர்களால் பாடசாலையில் தேக ஆரோக்கியமான நிலையில் அமர்ந்து கல்வி கற்க முடிவதில்லை. இந்தப் பாடசாலையில் தினமும் 10இற்கும் அதிகமான மாணவ, மாணவிகள் பல்வேறு உடல்நலக் குறைவு நோய்களுக்கு உட்பட்டு பாடசாலையில் இருந்து இடையிலேயே வீடுகளுக்கு திரும்பி விடுகின்றனர். மாணவர்களின் இத்தகைய போசாக்கு நிலை காரணமாக அவரது கல்வி பாதிப்படைகிறது.எனவே இந்த நிலை விரைவில் தீர்க்கப்படவேண்டும். இதற்கான தீர்வை காண்பதன் மூலம் மேற்படி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை அதிகரிக்க முடியும் எனவும் தெரிவித்தார். (லோ.தீ)

## விசேட சிகிச்சைக்காக செல்லும் நோயாளர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவலம்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பகுதியில் இருந்து யாழ்.மருத்துவமனைக்கு விசேட சிகிச்சைக்காக செல்கின்ற நோயாளர்கள் யாழ்.மருத்துவமனையில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னிப் பகுதியின் மருத்துவ சேவைகள் முற்றாக சீர்செய்யப்படாத நிலையில் மேலதிக விசேட மருத்துவசிகிச்சைகளுக்கு யாழ்.மருத்துவமனைக்கே செல்ல வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. இதற்காக பெரும் சிரமங்களை எதிர்கொண்டு நீண்டதூரம் பயணிக்க வேண்டியநிலை உருவாகியிருக்கிறது.

இந்த நிலையில் வன்னிப்பகுதியில் இருந்து நோயாளர்கள் யாழ். மருத்துவமனைக்கு செல்கின்ற வேளை நேரம் நண்பகலைத் தாண்டிவிடுகிறது. இதனால் அவர்களால் அங்கே கூடியிருக்கின்ற பெருந்திரளான நோயாளர்களுடன் இங்கிருந்து செல்கின்ற நோயாளர்களும் நீண்டவரிசையில் காத்திருந்தே செல்லவேண்டிய நிலை உருவாகிறது. நோயாளிகள் காலை 4.00மணிக்கே மருத்துவமனையில் கூடி விடுகின்றனர். இதனால் இங்கிருந்து சிகிச்சை பெறச் செல்கின்ற நோயாளர்கள் சிகிச்சை பெறாது திரும்ப வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.

இதனால் வன்னியில் இருந்து செல்கின்ற நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்நிலையால் முதல்நாள் மாலையே அங்கு சென்றே சிகிச்சை பெற வேண்டியநிலை ஏற்பட் டுள்ளது. உறவினர் வீடுகள் இல் லாத நிலையில் உள்ள நோயா ளிகளே இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே இவ்வாறு வன்னிப்பகுதியில் இருந்து செல்கின்ற நோயாளிகளுக்கான முன்னுரிமை வழங்கி அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகளை வழங்கவேண்டும் எனவும் நோயாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (லோ)



நெதர்லாந்தில் தமிழ் அமைப்புக்கள் இணைந்து, 1948 இலிருந்து இலங்கையில் தமிழர்களின் வரலாற்றையும் தற்போதையபேச்சுவார்த்தை நிலைமையையும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் இன்றைய நிலையையும், மனிதாபிமான தேவையையுக் விளக்கி அண்மையில் நடத்திய கண்காட்சி நிகழ்வு.

# புலிகளை யுத்தத்திற்கிழுக்கும் அரசின் நடவடிக்கை தேசியத்தலைவரின் தூரநோக்கால் முறியடிப்பு

## யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர்

(காரைநகர்)

**யுத்த நிறுத்த சூழ்நிலையைக் குழப்பி மீண்டும் ஒருபோரை ஆரம்பிப்பதுடன் அதன் பழியைப் புலிகள் மீது சுமத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது. ஆனாலும் தமிழீழ தேசியத்தலைவரின் தூரநோக்குடனான அரசியல் காய் நகர்த்தல்களால் அரசின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டு வருகின்றன.**

இவ்வாறு நேற்று முன்தினம் காரைநகரில் இடம்பெற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான ஒன்று கூடலில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சு வார்த்தைகள் இக்கட்டான சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கும் நிலையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்விற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் படுகொலைகளையும், அச்சுறுத்தல் நடவடிக்கைகளையும், இராணுவ நெருக்குவாரங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு தமிழ் மக்கள் மீது வன்முறைகளைத் திணித்து புலிகளை மீண்டும் ஒரு போருக்கு அழைக்க அரசாங்கம் தீவிரமுயற்சி செய்துவருகிறது.

புலிகளைப் போரிற்கு அழைப்பதன்மூலம் புலிகளைப் பயங்கரவாதிகள் என சர்வதேசத்திற்குப் பிரசாரம் செய்வது அரசின் நோக்கமாகும்.

இவற்றை நன்றாக அறிந்துள்ள தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தமிழின விடுதலைக்கான தூரநோக்குடன் செயலாற்றி வருகிறார்.

இதேபோல பொதுமக்களும் அரசின் இக் கபட நாடகங்கள் குறித்து விழிப்புடன் செயற்படுவது அவசியம் எனவும் தெரிவித்த யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் இது குறித்து மக்களிடையே தெளிவை ஏற்படுத்தும் பொறுப்பு பொது அமைப்புகளுக்கு உண்டு என்றார். (33)

# நாவற்குழி கைதடி பகுதிகளில் தென்னை மீள் நடுகை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு நாவற்குழி, கைதடி மறவன்புலோ, தனங்களப்பு ஆகிய பிரதேசங்களில் படையினரால் அழிக்கப்பட்ட தென்னை மரங்களை மீள் நடுகை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் மூலம் மேற்படி பகுதிகளை ஆக்கிரமித்து தமது பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி வைத்திருந்த படையினர் அண்மையில் அப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதித்துள்ளனர்.

இவ்வாறு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்கள் முன்னர் படையினரது கட்டுப்பாட்டில் இருந்த வேளை படையினரால் தறிக்கப்பட்ட தென்னை மரங்களே இவ்வாறு மீள்நடுகை செய்யப்படவுள்ளன. இதற்குரிய நடவடிக்கைகளை வட மாகாண தெங்கு அபிவிருத்தி சபை மேற்கொண்டு வருகிறது. (33)

# மாகாண சுகாதாரப் பணிமனையின் இருநாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மாகாண சுகாதாரப் பணிமனையின் இருநாள் கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும், தினமும் காலை 8.30மணி தொடக்கம் மாலை வரை பருத்தித்துறை சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெறவுள்ளது. ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்குகளில் பாலியல்நோய் சம்பந்தமான கருத்துரைகள் தகுதி வாய்ந்த நிபுணர்களால் வழங்கப்பட வுள்ளன. இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்டத் திலுள்ள கல்வித்துறைசார் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (33)

# சட்ட விரோத மணல் அகழ்வு மண்கும்பான் மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்தில் உள்ள மண்கும்பான் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மணல் அகழும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

அண்மைக்காலமாக மேற்படி பிரதேசத்தில் உள்ள கடற்கரைகளிலும் குடிமனைகளை அண்மித்தும் இடம்பெறும் இச்சட்டவிரோத மணல் அகழ்வுகளால் இப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்குகளும், கடல் அரிப்புகளும் இடம்பெறக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து அப்பகுதி மக்கள் பல தடவை பொலிசாரிடம் முறையிட்டுள்ள போதும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் முன்வரவில்லை என மக்கள் குறை கூறியுள்ளனர். (33)

# மாதகல் கடலில் படையினர் பயிற்சி, தொழிலுக்குச் செல்ல மீனவர் அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாதகல் கடற்பரப்பில் கடற்படையினர் தீவிர சண்டைப் பயிற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த சில நாட்களாக சிறிலங்கா கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வாறான சண்டைப்பயிற்சிகளின்போது கடற்படையினர் செய்யும் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் பீரங்கித் தாக்குதல் பயிற்சி நடவடிக்கைகளால் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு மீனவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இதேவேளை மேற்படி பகுதியில் உள்ள கடற்கரையோரக் காவலரண்களும் படையினரால் புனரமைக்கப்பட்டுப் பலப்படுத்தப் பட்டுவருகிறன. (33)

# யாழ். கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் முக்கிய மாநாடு ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத்தின் செயலாளர் எஸ். சூரியகுமார் தலைமையில் இடம் பெற்ற இம்மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், கி.சிவநேசன், மா.கா.ஈழவேந்தன் ஆகியோரும் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேசங்களையும் சேர்ந்த மீனவர்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கடற்படையினரது, கடல் வலயப் பாதுகாப்பு நடைமுறை, பாஸ்நடைமுறை, மீள் குடியமர்வுப் பிரச்சினை, இராணுவப்பாதுகாப்பு வலய நடைமுறை, தொழில் செய்யச் செல்லும் கடற்றொழிலாளர்களுக்குக் கடற்படையினர் விதிக்கும் நேரவரம்புகள் போன்ற கடற படையினரது கெடுபிடிகள் • குறித்து ஆராயப்பட்டன. இவ்வாறு படையினரால் மீனவர்கள் மீது புரியப்படும் கெடுபிடிகளை நீக்கக் கோரி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது என இம்மாநாட்டின் முடிவில் தீர்மானிகப்பட்டது. (33,27)

# யாழ்.சமாதான நீதவான்கள் சங்கம் போராட்டத்தில் பங்கேற்க அழைப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து சமாதான நீதவான்களும் நாளை வியாழக்கிழமை காலை பிரதேச ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனங்களில் பொஸ்கோ அச்சு இயந்திரசாலைக்கு வருகை தந்து போராட்டத்திற் பங்கேற்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்காக நடத்தப்பட்ட விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அரச வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பிரதேச செயலாளர்கள், தமிழீழ அரசியல் துறையினா இணைந்து இப்பிரதேசங்களில் ஏற்படக்கூடிய பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பிரதேச ரீதியாக நல்லிணக்க சபை அமைக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் விரைவாக நடைபெற்று வருகிறன.

இதேவேளை நாளை நடைபெறவுள்ள எம் உரிமைக்கான கண்டன ஆர்பாட்ட ஊர்வலத்தில் அனைத்து வர்த்தகர்கள் மற்றும் கடமை புரியும் ஊழியர்களையும் காலை 9.00 மணியளவில் நவீன சந்தை வளாகத்தில் ஒன்று கூடும்படி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (28)

# சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு

82 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை யாழ்.மாவட்டத்தில் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

அந்த வகையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள இவ்விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையேயான போட்டிகளை நடத்த யாழ். கூட்டுறவுச் சபை தீர்மானித்துள்ளது.

# சுற்றுச்சூழற் பிரச்சினை குறித்து யாழ். செயலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சுற்றுச்சூழற் பிரச்சினைகள் தொடர்பான முக்கிய கூட்டமொன்று நேற்று முன்தினம் முற்பகல் யாழ். அரச செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா உட்பட யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலர்கள் மற்றும் சூழல் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் என பல உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது யாழ். மாவட்டத்தில் நிலவும், சுகாதார சீர்கேடுகள், தொற்றுநோய் பரம்பல்கள், வீதி விபத்துக்கள், சூழல் மாசடைதல் பிரச்சினைகள், இயற்கை வள அழிப்புக்கள் என்பவற்றால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதுடன் இதற்கான மாற்று நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

இதன் போது குறிப்பாக இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் படையினரால் பிரகடனப்படுத்தி வைக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் தஞ்சம் புகுந்து வாழும் கட்டாக்காலி நாய்கள் மற்றும், விசர்நாய்களை சுகாதார ஊழியர்கள் உட்பிரவேசித்து அழிக்கமுடியாத சூழ்நிலை காணப்படுவதால் யாழ்.குடா நாட்டில் கட்டாக்காலி மற்றும் விசர் நாய்களால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரித்து வருவதாகவும் இதற்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் எனவும் சுகாதாரத் துறை அதிகாரிகளால் சுட்டிக் காட்டப்பட்டது. யாழ்.குடா நாட்டிலுள்ள உணவகங்களில் சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களுக்குப் பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது. (33)

# நாய்களுக்குத் தடுப்பூசி; உரிமத் தகடுகள் வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் உபபணிமனைப் பிரிவில் 500இற்கும் மேற்பட்ட நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டு உரிமத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் இரண்டாவது கட்டமாய் ஏனைய பிரதேசங்களில் இன்று முதல் இப்பணிகள் வி[illegible] நடைபெறவுள்ளன எனக் கொடிகாமம் பிரதேச சபையின் செய[illegible]ர் ந[illegible]ச்சந்திரன் தெரிவித்தார். (28)

# விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்.சென். ஜோன்ஸ் மகாவித்தியாலயத்தின் முறைசாராக் கல்விப்பிரிவின் கீழான கணினிப் பயிற்சி வகுப்பில் இணைந்து கொள்ள விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடசாலைக் கல்வியைமுடித்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதனை நோக்காகக் கொண்ட இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# உடன்சந்திக்கவும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தில் படித்துப் பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகளை சுயவிபரக்கோவையுடன் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் பீடாதிபதி நடராஜ சுந்தரம் அவர்களை உடன் சந்திக்குமாறு முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (30)

# பெறுபேறுகள் வெளியாகின

யாழ்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 2002/2003 ஆம் கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களின் இறுதித் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

எனவே பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிட விரும்புவோர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் காரியாலயத்தில் வந்து பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சுருக்கெழுத்துப் பயிற்சி

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினால் விசேட சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இளைஞர், யுவதிகளின் தொழிற்தகைமைகளை அதிகரித்து தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதை இலக்காகக் கொண்டே இத் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வகுப்புக்களின்போது தமிழ் மற்றும் ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சிகள் சேவை நோக்குடன் வழங்கப்படவுள்ளன. (33)

# "ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்"

ஆதவன்

ஒரு புதிய பத்தியை ஆரம்பிக்கும் நான், எவ்வாறு என்னைப் பற்றி அறிமுகம் செய்யாமல் ஆரம்பிக்க முடியும்? ஒவ்வொருவரும் தம்மைப்பற்றி அறிமுகம் செய்கையில் உண்மையைப் பேசுகிறார்களா? உண்மையில் 'அறிமுகம்' என்பது என்ன? 'அறிமுகம்' என்றால் என்ன? என்பதற்கான ஓர் அறிமுகம் என்று இந்தவார பத்தியை எடுத்துக் கொள்ளுங்கள்.

நான் யார்? அல்லது நீ யார்? போன்ற கேள்விகளுக்கு எவ்வாறு திருப்தியான விடையளிப்பது? 'ஒவ்வொருவரும் உங்களை அறிமுகம் செய்யுங்கள்' என்று ஒரு கூட்டத்தில் யாராவது உங்களைக் கேட்டுவிட்டால் அல்லது நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டீர்கள் என வைத்துக் கொள்வோம். எவ்வாறு உங்களை நீங்கள் அறிமுகம் செய்யப்போகிறீர்கள்?

ஒரு உதாரணத்தை எடுப்போம்... சும்மா கற்பனைக்காக...!

ஜோர்ஜ்புஷ்சும் சதாம் ஹுசைனும் ஒரு வட்டமேசையில் அமர்கிறார்கள். அவர்கள் எவ்வாறு தம்மை அறிமுகம் செய்வார்கள்? எண்ணிப்பாருங்கள் பொய்யும், சுயநலமும் கலக்காமல் அறிமுகப்படுதல் சாத்தியமா? நான் சதாம் ஹுசைனின் எதிரி அல்லது நான் புஷ்ஷின் எதிரி என்று அவர்கள் தம்மை அறிமுகப்படுத்துவார்களா?

அறிமுகப்படுத்தலின் உண்மைத்தன்மை பற்றி அளவையியல் என்ன சொல்கிறது எனப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் இங்கே உண்டு.

ஒரு புதிய சிந்தனையின் தொடக்கமாக அறிமுகத்தை நாம் இரண்டாக வகுக்கலாம்.

1)நிர்ப்பந்த அறிமுகம்

2)சுயாதீன அறிமுகம்

முதலில் நிர்ப்பந்த அறிமுகத்தை எடுப்போம். இங்கு பெரிய பிரச்சினைகள் ஒன்றும் எழப்போவதில்லை. எங்கெங்கு எவ்வெவ் வழிகளில் நீங்கள் நிர்ப்பந்திக்கப் பட்டீர்களோ அங்கங்கு அவ்வவ்வழிகளை... அதாவது அந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் போதுமானது.

உதாரணமாக நீங்கள் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் ஊடகவியலாளர் ஆயின், உங்கள் அறிமுகம் அந்த நிறுவனத்தின் பிரதிநிதி என்ற வகையில் அது நிர்ப்பந்திக்கப்படும்.

மேலும் இதுபற்றி நோக்குமிடத்து... ஒருநாள் நான் ஆகாயவிமானத்தில் ஒருவரைச் சந்தித்தேன். நானும் அவரும் ஒரே நிறம் சுற்றவர வெள்ளைக்காரங்கள். அவருக்கு என்னுடன் பேசவேண்டும் என்று அவா. எனக்கும் அவா தான். எப்படி அறிமுகம் செய்வது என்று இருவருக்கும் புரியவில்லை. எம்மால் சுயாதீன அறிமுகம் சாத்தியமில்லாமற் போயிற்று. நிர்ப்பந்த அறிமுகம் உண்டாயிற்று. அவர் கேட்டார்

Where are you going?

நான் சொன்னேன்

Lanka

அவர் கேட்டார்

Are you tamil?

நான் சொன்னேன்

Yes.

உடனே அவர் சுத்தத்தமிழில்

"நீங்கள் எந்த ஊர்" என்றார்.

நானும் சுத்தத் தமிழில்

"மாவிட்டபுரம்" என்றேன்.

மேற்கூறிய உதாரணத்தில் நாங்கள் அறிமுகமாகவேண்டிய ஒரு உளவியல் நிர்ப்பந்தம் இருந்தது. தோலின் நிறத்தினாலும் எம்மவரோ என அறியும் ஆவலாலும் அது தூண்டப்பட்டது.

நிர்ப்பந்த அறிமுகத்திற்கு இன்னுமொரு உதாரணம் மிகவும் சுவாரசியமானது.

மினிபஸ்சில் காலுழைய நின்றும், இருந்தும் கொழும்பிலிருந்து வந்துகொண்டிருந்தேன். வெகுநேரமாக என்னையே பார்த்துக்கொண்டிருந்த அவர்; அவர்என்றால் ஒழுங்கான Dress ஒழுங்காக தலைசீவியிருந்தார். அவர் 'பெல்ட்' கட்டியிருந்தார். வயது 50 இருக்கும்அவருக்கு வயிறு சற்றுப் பெருத்திருந்தது. அடிக்கடி தன் கைலேஞ்சியால் முகத்தைத் துடைத்த வண்ணம் இருந்தார். எங்கள் பஸ் ரீ குடிப்பதற்காக மிகிந்தலையில் நின்றது. நான் ரீ குடிப்பதற்காக அந்தக் கடையினுள் நுழைந்தேன். இவரும் என்னைப் பின்தொடர்ந்தார். நான் ஒரு ரீக்கு ஓடர் கொடுத்தேன். இவர் வந்து என்னருகில் அமர்ந்து கொண்டார். நான் ரீஐ உறிஞ்சிக்கொண்டிருந்தேன். அவரே பேச்சை ஆரம்பித்தார். Broken English தான் என்றாலும் புரிந்தது எனக்கு

"this travelling is bad.

road is not good.

too hot here in srilanka

I am Mr.Maniyam

I work in Education office

going for my younger sister's wedding happy to meet you

என்றார்.

நான் எதுவுமே பேசவில்லை. அவர் எழுந்து பஸ்சுக்க போய்விட்டார். நான் எழுந்து ரீக்கு காசு கட்டிவிட்டு பஸ்சுக்குள் ஏறினேன்.

அந்த பஸ்சில் எனக்கு எதிர்எதிர் முன்சீற்றில் இருந்தவர் மணியம். அவரது சீற்றில் நாலுபேர் தாராளமாக இருக்கலாம். நாலுபேர்தான் இருந்தார்கள். அதேஅளவு சீற்தான் எங்கடையும், நாங்கள் ஆறுபேர் நெருக்கியடிச்சு 'அட்யெஸ்' பண்ணி வந்துகொண்டிருந்தோம்.

நான் இருந்த இடத்தில் அவர் தன் இரு கால்களையும் வைத்து... (சப்பாத்தைக் கழற்றிய 'சொக்ஸ் கால்கள்') ஏதுமறியாதவர் போல் நித்திரை செய்துகொண்டிருந்தார்.

சுமார் 3,4 நிமிடத்திற்குள் அவர் எப்படித்தான் தூங்கினாரோ தெரியவில்லை. குறட்டை கூட லேசாகக்கேட்டது. (நடிகர் திலகம்) நான் பஸ்சுக்குள் ஏறியவுடன் எனது சீற்காரர் என்னை ஒரு அப்பாவிபோல் பார்த்துவிட்டு... அவர்களும் நித்திரையாம். நடிக்கிறார்கள். எனக்கு இருப்பதற்கு சொட்டும் இடம்கூட இல்லை. நான்-

"Mr.Maniyam

Mr.Maniyam"

என்றபடி அவர் தோளைத் தட்டினேன். அவர்தான் நல்ல நித்திரைபோல் நடித்து திடுக்கிட்டு எழும்பி....

"ஒழுங்கா நித்திரை கூட கொள்ள விடாதுகள்"

என்று முணுமுணுத்து பிறகு ஒருகாலை மட்டும் கீழை இறக்கிவைக்க நான் ஒரு பேயன்போல அந்த இடைவெளிக்குள் அமர்ந்து கொண்டேன். (நீங்கள் நான் ஒரு கோழை எண்டு யோசிப்பியள். பரவாயில்லை யோசிங்கோ)

நான் சொல்லவந்த விஷயம் இதுதான். Mr.Maniyam இவற்றை அறிமுகம் எனக்கு நிர்ப்பந்தமோ இல்லையோ...?

அடுத்த புதன் ஈழநாதத்தில் மீதி பேசுகிறேன்.

---

# அடிப்படை வசதிகளை எதிர்பார்த்து இயங்கும் உழவனூர் அ.த.க.பாடசாலை

(அலுவலகசெய்தியாளர்)

தர்மபுரம் உழவனூர் அ.த.க. பாடசாலை எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையிலேயே இயங்கி வருகின்றது. இவ்வாறு அப்பாடசாலையின் அதிபர் சந்திராவதி பாலகிருஸ்ணன் கவலை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தகவல் தருகையில்,

உழவனூர் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதோடு மாணவர்களும் நீண்டதூரம் கால் நடையாகச் சென்று கற்கவேண்டிய நிலையிலிருந்தனர். இந்நிலையை உணர்ந்த இப்பகுதி மக்களின் பெரும் முயற்சியால் 2002ஆம் ஆண்டு இந்த ஆரம்பப் பாடசாலை அமைக்கப்பட்டது. இதற்கு கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெறப்பட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



அதிபர் அலுவலகம்

இங்கு தரம் 01 தொடக்கம் தரம் 05வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். மொத்தமாக 84 மாணவர்களை உள்ளடக்கிய இப்பாடசாலைக்கான காணியினை கானான் நவஜீவனத்தினர் அன்பளிப்பாக வழங்கினர். இதில் பாடசாலைக் கொட்டில்கள் அமைந்திருக்கும் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் பெரும் காடாகவே காணப்படுவதோடு காணியைச் சுற்றி வேலிகள் கூட அமைக்கப்படாத நிலையில் உள்ளதோடு எந்தவித நிரந்தர கட்டடங்களுமின்றி ஓலைக் கொட்டில்களில் வகுப்பறைகள் அமைந்திருப்பதனால் மழை காலங்களில் மழை நீர் உட்புகுந்து கற்றல் செயற்பாட்டை பாதிப்பதாக அமைகின்றது. உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவி கூட கிடைக்காதா என இப்பகுதி மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

ஆனால் இப்பின்தங்கிய பாடசாலைக்கு இதுவரை எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவில்லை. அதிபரின் அலுவலகம் கூட சிறு குடிசையிலேயே இயங்குகின்றது.

அத்தோடு ஆரம்பப்பாடசாலையாக இருந்தபோதும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கூட முற்றாக இல்லை ஆனால் ஏனைய பாடசாலைகளுக்கு ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இங்கு மலசலகூட வசதி இல்லை. நீண்டகாலமாக மர நிழலில் கற்றுவந்த மாணவர்களுக்காக தற்போது தான் பொது மக்களின் உதவியுடன் ஒரு தற்காலிக கட்டடம் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது



பாடசாலை கொட்டகை

எனத் தெரிவித்த அவர்,

மேற்படி விடயங்கள் தொடர்பாக கல்வித்திணைக்களத்துடன் பலமுறை எடுத்துக்கூறியும் எதுவித ஆக்கபூர்வமான பதிலும் கிடைக்கவில்லை என அவர் மேலும் கூறினார். (ச)

---

## நிர்வாகிகள் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத் தெரிவுகள் அண்மையில் நடைபெற்றது. புதுமுறிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக பெ.பன்னீர்ச்செல்வமும், உபதலைவராக ப.சேதுபதியும், செயலாளராக நா.விஜயகுமாரும், உப செயலாளராக க.செல்லத்துரையும், பொருளாளராக குருநாதனும் தெரிவு செய்யப்பட்டதுடன் 08 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் திருமகன், கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (15)

## முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா

(ஒட்டுசுட்டான்)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு கல்வி நிலையத்தின் ஆதரவுடன் முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் வசுமதி முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டி அண்மையில் முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை மாவீரர் தாமரைச் செல்வியின் சகோதரன் சுந்தரம் ஏற்றியதைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டி நடைபெற்று இறுதியில் பரிசில்களும் வழங்கப்பட்டது. (05)

## விவசாயிகளுக்கு கருத்தரங்கு

உலக சூழல் தினத்தன்று முதன்மை விவசாயிகளுக்கான கருத்தரங்கு வவுனியா மாவட்ட த.பொ.மேம்பாட்டு நிறுவனம் கனகராயன் குளம் செயலகத்தில் விவசாய சூழல்பாதுகாப்பு இணைப்பாளர் ம.சோதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விவசாயத்திணைக்கள விவசாய உத்தியோகத்தர் , விவசாயப் போதனாசிரியர் ஆகியோரால் கிருமிநாசினி பாவனையால் சூழல் மாசடைதல் தொடர்பாகவும் பிளாஸ்ரிக் பாவனையால் ஏற்படும் தீமைகள் தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கப்பட்டது.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவில் வவுனியா முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தால் நடாத்தப்பட்ட ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திக்கான பயிற்சிப்பட்டறை வவுனியா புனித அந்தோனியார் ஆலய பாலர் பாடசாலையின் 29,30ஆம் திகதிகளில் உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அந்தோனியார் ஆலய உதவிப் பங்குத்தந்தை மரிடிக்கோல் பிரான்சிஸ் ஆசியுரை வழங்கினார். பரமானந்தம் (வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்), ஞானதயா ளன்(வவுனியா தெற்கு வலயக்கல்வி ஆலோசகர்) முதன்மை ஆசிரியர்களான ஜயானந்தன் மரினா, ரஞ்சன்-சரஸ்வதி, சோமசுந்தரம்-கமலாதேவி, அற்புதராசன் சுகர்னா ஜன்சி, உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம் போன்றோர் விரிவுரைகளை நடத்தினார்கள்.




**7**

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தி ஒன்றின் மீது பின்புறமாக அதிவேகமாக வந்த 'கன்டர்'வாகனமொன்று மோதியதில் கன்டர் வாகன ஓட்டி உட்பட வாகனத்தில் பயணம்செய்த நால்வர் படுகாயம்.


வாகன விபத்து

நாடாளுமன்றக் கட்டடத்தில் எதிர்க் கட்சித் தலைவரைச் சந்தித்த கூட்டமைப்பு எம்பிக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மேற்கொண் டுள்ள சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

மட்டக்களப்பு செங்கலடி கறுத்தப் பாலமூடாக இரவு 10 மணிக்குப் பின் போக்குவரத்தைப் படையினர் தடைசெய்துள்ளதினால் கரடியனாறு இலுப்பையடிச் சேனையைச் சேர்ந்த மக்கள் பெரும்பாதிப்பு.

பதிவுசெய்யப்பட்ட உதவி மருத்துவர்கள் நாடளாவியரீதியில் ஆரம்பித்த வேலைநிறுத்தப் போராட்டத்தினால் நோயாளிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

மட்டக்களப்பு நாவிதன்வெளி அரசியல்துறைப் பணிமனை மீது கைக்குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது.

**8**

பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வு இடம்பெற்றவேளை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஜாதிகஹெல உறுமயவின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகள் படுகாயமடைந்தனர்.


காயமடைந்தவரில் ஒருவர்

**9**

வவுனியா புதுக்குளம் பிரதேசப் பொறுப்பாளர் அழகரசன் சிறிலங்காப் பொலிசாரால் தாக்கப்பட்டார்.

யாழ்.தென்மராட்சி கனகம் புளியடிச் சந்திப்பகுதியில் சிறிலங்காப் பொலிசாரால் புதியபொலிஸ் நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளரான மோகனின் வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் வைத்து இரு பௌத்தபிக்குகள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இடம்பெற்ற சத்தியாக்கிரகத்தில் பெருமளவு பிக்குகள் கலந்து கொண்டனர்.


இலங்கையில் உள்ள சகல துறைமுகங்களின் பாதுகாப்புத் தொடர்பான அறிக்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி விமானப் போக்குவரத்துத் துறைமுகங்கள் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கையளித்தார்.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான மிக் 27 ரக யுத்தவிமானம் பெருஞ் சத்தத்தோடும், தீச்சுவாலையுடன் நீர் கொழும்பு வாவிக்குள் விழுந்தது. விமானி பரசூட் மூலம் குதித்துத் தப்பினார்.


'மிக்'கின் அழிவு

**10**

1986 ஆம் ஆண்டு மண்டைதீவு கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் வெட்டிக் கொலைசெய்யப்பட்ட 31 அப்பாவி மீனவர்களின் நினைவாக நினைவுத் தூபி குருநகர் சந்தியில் திறந்துவைக்கப்பட்டது.


குருநகர் சந்தியில் நினைவுத்தூபி

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் தளபதி லெப் ஜெனரல் ஜேம்ஸ்எல்கம்பெல் இலங்கைப் படைகளின் தலைமை அதிகாரியும் இராணுவத்தளபதியுமான லெப் ஜெனரல் பலகல்லவைச் சந்தித்து சிறிலங்காவிற்குத் தேவையான போர்த்தளபாடங்களை வழங்க அமெரிக்கா விருப்பம் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலை, அரசாங்கத்தின் ஸ்திரமற்ற போக்கு பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் அது தொடர்பாக மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

தமிழீழக் காவல்துறையின் மன்னார் அடம்பன் பிரதேசத்திற்கான புதிய காவல் பணிமனை திறந்துவைக்கப்பட்டது.


காவல்பணிமனை திறப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினர். இதன் போது இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துதல், விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளல் உள்ளிட்ட நான்கு விடயங்களை சந்திரிகா ஏற்றுக்கொண்டார்.

ஐ.தே.க. தலைவர் கருஜயசூரிய, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கிம், இ.தொ.க.தலைவர் ஆறுமுகம் தொண்டமான், தமிழரசுக்கட்சிச் செயலாளர் மாவை சேனாதிராசா, ஜாதிக ஹெலஉறுமயவின் பேச்சாளர் அத்துரெலிய ரத்னதேரர் ஆகியோர் கூட்டாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஒன்றிணைந்து செயற்படுவதாகத் தெரிவித்தனர்.

**11**

பரந்தன் முதலாம் கட்டைப்பகுதியில் வாகன எதிர்ப்பு கண்ணிவெடியில் கன்டர் வாகனம் சிக்கியதில் அதில் பயணம் செய்த சாரதி உட்பட மூவர் உயிரிழந்தனர்.


கண்ணிவெடியில் சிக்கிய வாகனம்

ஜே.வி.பி யைச் சேர்ந்த மீன்பிடி கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்கரைச் சந்தித்து நோர்வே இலங்கையில் எண்ணெய் வளங்களை ஆராய்வு செய்வதற்கான திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கான திட்டம் பற்றிக் கலந்துரையாடினார்.

யாழ்.மாவட்டத்தில் வெடி பொருட்களை அகற்றுவதற்காக 7மோப்ப நாய்களைக் கொண்டு வரவிருப்பதாக யாழ். செயலகத்தில் இயங்கும்"மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துக்கு" விஜயம் செய்த அமெரிக்காவின் மான்சல் லெகாசி நிறுவனத்தின் தலைவர் கேணல் றெஜி எவ்.பல்ரிமோரி தெரிவித்தார்.

கடற்புலி மாவீரர் லெப்.கேணல் சாள்ஸ் அவர்களின் பதினோராம் ஆண்டு நினைவாக நினைவு மண்டபம் முல்லைத்தீவு கடற்புலிகளின் பாசறை ஒன்றில் திறந்து வைக்கப்பட்டது.


நினைவுமண்டபம் திறப்பு

களுத்துறை சிறைச்சாலைக்குச் சென்ற கூட்டமைப்பு எம்.பிக்களிடம் தமது அன்றாட பிரச்சினைகள் குறித்து கைதிகள் முறைப்பாடு செய்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க பசுபிக்பிராந்திய கட்டளைத் தளபதி லெப்.ஜெனரல் ஜேம்ஸ் எல்.கம்பெல் படையதிகாரிகளைச் சந்தித்த பின் யாழ். நகரப்பகுதி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களை ஹெலிகொப்டரில் பறந்து பார்வையிட்டார்.

**12**

தகவல்துறை அமைச்சராகவும், அமைச்சரவைப் பேச்சாளராகவும் பதவி வகித்த றெஜினோல்ட் கூரே மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதால் தகவல் அமைச்சராக மங்கள சமரவீர சனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தார்.

நாட்டின் இறைமையைப் பாதிக்காத வகையில் இடைக்கால நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடைபெறும் என சனாதிபதி நாட்டுமக்களுக்கு உரை நிகழ்தினார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் பயணமானார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் விடுதலைநூலின் அறிமுகவிழா வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.


நூல் அறிமுக விழா

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள குருலேகங்கையில் உள்ள ஐ.நா.இராணுவப் பயிற்சி முகாமில் "சமாதானப்பயணம்" என்ற தொனிப்பொருளில் இலங்கை இராணுவம் உட்பட ஆறுநாடுகளைச் சேர்ந்த படையினருக்கான பாரிய பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

**13**

கைதாகிக் காணாமல் போனோர் குறித்து தமிழ்க்கூட்டமைப்பினர் குரலெழுப்ப வேண்டுமெனப் "படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க" கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.


பாதுகாவலர் சங்கக் கூட்டத்தில்

# மட்டக்களப்பு ரெலோ அலுவலகம் சோதனை

மட்டக்களப்பில் ரெலோ அலுவலகம் உட்பட 05 இடங்களில் சிறிலங்காப்பொலிசாரும்,இராணுவத்தினரும் நேற்று முன்தினம் சோதனை நடத்திசட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மறைத்து வைத்திருக்கலாமென்ற சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதிகாலை 4.30 மணியிலிருந்து 8.00 மணிவரை 05 குழுக்களாக பிரிந்த இவர்கள் ரெலோ அலுவலகம், பிரபல வர்த்தகர் ஒருவரின் வீடு உட்பட இரண்டு வீடுக ளிலும் இரண்டு ஹோட்டல்களிலும் இச்சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர்ரெலோ செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திரகுமார் தமது கட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்;

சம்பவத்தின்போது அலுவலகத்தில் 04 பேர் மட்டும் இருந்தனர் எனவும், 20இற்கும் மேற்பட்ட பொலிசாரும், இராணுவத்தினரும் இரண்டு மணித்தியாலமாக அலுவலகத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இத்தேடுதல் குறித்து நீதிமன்ற அனுமதி கிடைத் துள்ளதாகப் பொலிசார் கூறிய போது அதற்கான காரணங்கள் எதுவும் எமக்குக் கூறப்படவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

## துரித கதியில் கண்ணிவெடி அகற்றல்

முல்லைத்தீவு நகரப்பகுதியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகமுல்லைத்தீவுக் கரையோரப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் தெரிவித்தார்.

(ஆ)


## தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி

மேற்படி பணி அரச பணியாளர்களின் நலன்கருதி 18.06.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப்பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

கிளிநொச்சி முறிகண்டி

| கிளிநொச்சி | இரணைமடுச்சந்தி | முறிகண்டி |
|---|---|---|
| மாலை-4.30 | மாலை-4.40 | மாலை-5.00 |

முறிகண்டி-கிளிநொச்சி

| முறிகண்டி | இரணைமடுச்சந்தி | கிளிநொச்சி |
|---|---|---|
| மாலை-5.00 | மாலை-5.20 | மாலை-5.30 |

முகாமையாளர்,
கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி.9721)

## தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி

வெள்ளாங்குளம் -பூநகரி பேருந்துப்பணி வெள்ளாங்குளம் -பூநகரி-கிளிநொச்சி பணியாக மாற்றம்

மேற்படி பணி 18-06-2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில்நடைபெறும் என்பதனைப் பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன்அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

வெள்ளாங்குளம்-பூநகரி-கிளிநொச்சி

| வெள்ளாங்குளம் | முழங்காவில் | செயபுரம் | செம்மன்குன்று | பூநகரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| காலை7-30 | காலை8-00 | காலை 8-30 | காலை-9.30 | காலை10.00 | காலை-11-15 |

கிளிநொச்சி, பூநகரி, வெள்ளாங்குளம்-

| கிளிநொச்சி | பூநகரி | செம்மன்குன்று | செயபுரம் | முழங்காவில் | வெள்ளாங்குளம் |
|---|---|---|---|---|---|
| பகல் 1.00 | 2.15-2.30 | 3.00 | 4.00 | 4.30 | 5.00 |

முகாமையாளர்,கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-9722)

## வீரவணக்கம்

## 03 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்

தாயின் மடியில் - - 1967
தாயக மண்ணில் 16 - 06 - 2001



தமிழீழ தேசியத்துணைப் படை வீரர்
**சி.சிறிகாந்தன்**
நி.மு 17ஆம் கட்டை கொக்குத் தொடுவாய் குருசடி
த.மு.அலம்பில் செம்மலை.

தாயின் மடியில் 15 - 06 - 1981
தாயக மண்ணில் 16 - 06 - 2001



தமிழீழ தேசியத்துணைப்படை வீரர்
**ஏ.ஜேசுதாஸ்**
நி.மு 06 ஆம் யூனிற் இராமநாதபுரம்
வட்டக்கச்சி.

தாயின் மடியில் 26 - 06 - 1981
தாயக மண்ணில் 16 - 06 - 2001



தமிழீழ தேசியத்துணைப்படை வீரர்
**சி.விமலதாஸ்**
நி.மு யாழ். மாவட்டம்
த.மு.கணேசபுரம்முருகன்கோவிலடி
கிளிநொச்சி.

சிலோன் தியேட்டர் பகுதியில் 16.06.2001அன்று ஓயாதஅலை 03 நடவடிக்கையின் போது சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தனர். இம்மாவீரர்களுக்கும், இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழீழ காவல்துறையின் சிறப்புப் படையணியினர்.

(4703)

# வாக்காளர் இடாப்பில் ஒரு இலட்சம் பெயர் நீக்கம் இந்திய தேர்தல் ஆணையகத்தின் விசாரணை ஆரம்பம்

(புதுடில்லி)

**மக்களவைத் தேர்தலில் தமிழக வாக்காளர்கள் ஒரு இலட்சம் பேரின் பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பான விசாரணைகளை தேர்தல் ஆணையகம் ஆரம்பித்துள்ளது.**

இதற்கென்று கேரளாவின் தலைமைத் தேர்தல் அதிகாரி பி.ஜே.தோமஸ் நேற்று மதுரையில் விசாரணைகளைத் தொடங்கியுள்ளார்.

விசாரணைகளின் முதல் கட்டமாக தமிழக மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடனும் மற்றைய அலுவலகர்களுடனும் அவர் நேற்று விவாதித்துள்ளார்.

அத்துடன் புதியவாக்காளர் இடாப்பையும், பழைய வாக்காளர் இடாப்பையும் அவர் ஒப்பிட்டு ஆராயவுள்ளார். திருத்தங்கள் தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையகத்திற்கு இவர் அறிக்கை சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# 24 வர்த்தகரைக் கடத்திய திரிபுரா தீவிரவாதிகள்

(புதுடில்லி)

திரிபுராவில் பழங்குடியினத் தீவிரவாதிகள் 24 வர்த்தகர்களைக் கடத்திச் சென்றுள்ளனர் என்று மாநில பொலிசார் கூறியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

பழங்குடியினத் தீவிரவாதிகள் அம்மாநில அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தீவிரவாதிகள் தம்மிடம் பண இருப்பு இல்லாது போகும் போது வர்த்தகர்களைக் கடத்திச் சென்று அவர்களது குடும்பத்தினரிடம் மிரட்டிப் பணம் பெறுவது வழமை.

நேற்று முன்தினமும் அவ்வாறே 24 வர்த்தகர்களைக் கடத்திச் சென்றுள்ளனர் என்றும் மீட்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

# மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை வரும் 8ஆம் திகதி தாக்கலாகும்

(புதுடில்லி)

மத்தியரசின் நிதிநிலை அறிக்கை எதிர்வரும் எட்டாம் திகதி தாக்கல் செய்யப்படவுள்ளது. நேற்று பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை நேற்று செய்தியாளர்களிடம் சமூகநீதித்துறை அமைச்சர் மீராகுமார் கூறியுள்ளார்.

இதற்காக பாராளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் எதிர்வரும் ஐந்தாம் திகதி கூடவுள்ளது. ஆறாம் திகதி புகையிரத பட்ஜெட், ஏழாம் திகதி 2003, 2004 இன் பொருளாதாரம் ஆய்வறிக்கையும் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இந்திய-பாக். ஒருங்கிணைந்த சமாதானப்பேச்சு விரைவில்ஆரம்பிக்கும்

## பாக். வெளியுறவுத்துறை அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒருங்கிணைந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகுமென்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குஸ்சித் முகமட் கஸ்தூரி கூறியுள்ளார்.

முதலில் இரு நாடுகளின் செயலர்களும் சந்தித்து பேசுவார்கள் என்றும் பின்னர் வெளியுறவு அமைச்சர்களும் சந்தித்துப் பேசுவார்கள் என்று குஸ்சித் முகமட் கஸ்தூரி கூறியதாக நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் இப் பகுதியில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது மிகவும் அவசியம் என்றும் கஸ்தூரி கூறியதாகவும் அந்நாளேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கலாசாரத்தைப் பாதிக்கும் திரைப்படங்களை தடைசெய்யப்போவதாக அமைச்சர் தெரிவிப்பு

கலாசாரத்தைப் பாதிக்கும் மோசமான திரைப்படங்களை தடைசெய்யப் போவதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்காவின் கலாசார அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சமுகத்தை சீரழிக்கும் வகையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதையும், திரைப்படக் கொட்டகைகளின் முன்னால் ஆபாச விளம்பரங்கள் வைக்கப்படுவதையும், கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கலாசார அமைச்சர் விஜித ஹேரத் பணிப்புரை விடுத்துள்ளார். இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து திரைப்படங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் கடுமையான கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதெனவும், முன்னுரிமை அடிப்படையில் உள்ளூர்த்திரைப்படக் கலையின் வளர்ச்சிக்கு உதவுவதற்கும் அமைச்சர் முடிவு செய்துள்ள தாகவும் கலாசார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். அமைச்சர்விஜித ஹேரத்தின் சமீபத்திய அதிரடி நடவடிக்கை காரணமாக கொழும்பு கதிரேசன் வீதியில் இயங்கிவந்த பல பாலியல் திரைப்பட மினி சினிமாக் கொட்டகைகளும், விபச் சார விடுதிகளும், போதைப் பொருள் விற்பனை நிலையங் களும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

# சமாதானத்திற்காக அமெ. பல உதவிகளைச் செய்கிறது

## அமெ. பிரதித்தூதுவர்

(அம்பாறை)

இலங்கையில் சமாதானம் மலர வேண்டும் என்பதற்காக அமெரிக்கா பலவித முயற்சிகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றது. இவ்வாறு அமெரிக்காவின் இலங்கைக்கான பிரதித்தூதுவர் ஜேம்ஸ் அன்ட்வின்ரிட் நேற்று முன்தினம்

அமெரிக்கா சமாதானத்திற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராகவும் உள்ளது. என்று நேற்று முன்தினம் அம்பாறையில் சமூகநல்வாழ்வு அலுவலகத்தில் ஆங்கில வளநிலையம் ஆரம்பிக்கப்பட்டபோது பிரதம அதிதியாகக் கலந்து பிரதித்தூதுவர் இவ்வாறுகூறியுள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பு மீண்டும் அதிகரிப்பு

சிறிலங்கா அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினரால் குறைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பொலிஸ் மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கை மீளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வாரம் சனாதிபதியால் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட பணிப்புரையின் காரணமாக, இதுவரை காலமும் நான்கு பொலிஸ் மெய்ப் பாதுகாவலர்களுடன் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக்கப்பட்டிருந்தது. இதேவேளை தற்போது வழங்கப்பட்டுள்ள இப்புதிய உத்தரவின் பேரில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, ஜி.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான் மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோருக்கு முன்னரைப் போலவே ஒருவருக்குத் தலா நான்கு காவல்துறை மெய்ப் பாதுகாவலர்கள் வழங்கப்பட்டுள்ளனர்.

# உயர்மட்ட மாநாடு

கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளின் உயர்மட்ட மாநாடு நேற்று முன்தினம் நடந்துள்ளது.

இந்த மாநாட்டில் அரசாங்க திணைக்கள உயர் அதிகாரிகளும் கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் கலந்து கொண்டுள்ளனர். அம்பாறை அரச செயலகத்தில்அரச அதிபர் தலைமையில்இந்தமாநாடு நடந்துள்ளது.

# தமிழ்த்தேசியம் இன்று ஆயுத பலத்தையும் அரசியல் பலத்தையும் கொண்டுள்ளது

## கொழும்பு கூட்டத்தில் ரவிராஜ்

தமிழ்த்தேசியத்துக்காகவும், தமிழ்க் கூட்டமைப்புக்காகவும் அன்று முதல் இன்று வரை குரல் கொடுத்து வருபவர் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரனாவார். எனவே அவர் ஒருபோ தும்பேரினவாதிகளுக்கு அடிபணிந்தவர் அல்லர்.

மலையகம், கொழும்பு, வட-கிழக்கு என்று பிரிந்து செயற்பட்ட தமிழ் மக்கள் இன்று பிரிவினைகளை மறந்து தமிழ்த் தேசியத்தின் கீழ் ஒன்றுபட்டுள்ளனர். இதனைக் கண்டுபேரினவாதிகள் அச்சமடைந்துள்ளனர் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் தெரிவித்தார். தமிழத் தேசியப் போராட்டத்துக்கு ஆரம்பம் முதல் தன்னை ஈடுபடுத்தியவர் சந்திரசேகரனாவார். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மலையக மக்கள் முன்னணிக்கு தனது முழுமையான ஆதரவினை வழங்கப் பின் நிற்கப் போவதில்லை என்றும் ரவிராஜ் கூறினார். மேல் மாகாண சபைக்கு கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிடும் இருவேட்பாளர்களான கே.ரி.குருசாமி, சிவா ஆகியோரை ஆதரித்து கடந்த சனிக்கிழமை மாலை கொழும்பு ஆமர் வீதியில் உள்ள பிறைட்டன் விடுதியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும போதே ரவிராஜ் எம்.பி. இவ்வாறு கூறினார். . இங்கு உரையாற்றிய ரவிராஜ்மேலும் தெரிவித்ததாவது:- தமிழர்களின் ஒற்றுமை தொடர வேண்டும். தமிழ்த்தேசியம் இன்று ஆயுத பலத்தையும் அரசியல் பலத்தையும் கொண்டுள்ளது. எனவே தான் அரசாங்கம் இன்று பேச்சுவார்த்தைக்கு இறங்கி வந்துள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ்க்கட்சி ஒன்றுக்கு ஆதரவு வழங்குவதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. தமிழ் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் ஆதரித்தே செல்கின்றது.


# துயர் பகிர்கின்றோம்

## திருமதி மோகனசுந்தரி ஸ்ரீ ராஜராஜேஸ்வரன்

எமது பிரிவைச் சேர்ந்த போராளி திரு.ஸ்ரீ.ஈழச்செல்வன் (லோலோ) அவர்களின் தாயாராகிய திருமதி மோகனசுந்தரி ஸ்ரீ ராஜராஜேஸ்வரன் அவர்கள் காலம்சென்ற செய்தி கேட்டு மிகவும் கவலையடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர், போராளிகள், பணியாளர்கள்
தமிழீழ சுகாதார சேவைகள்.

(சி-9724)



# கேள்வி அறிவித்தல்

வலயக்கல்விப்பணிப்பாளர், துனுக்காய் அவர்களால் பின்வரும் வேலைகளுக்கு மூடிய கேள்விகள் இக்ராட்டுடன் பதிவு செய்த தரம்8 தகைமையுள்ள, கட்டட நிர்மாண ஒப்பந்த காரர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 250.00 உம் கேள்விப்பணமாக ரூபா 1000.00 உம் வலயக் கல்வி அலுவலகத்தில் 18.06.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு முன்னர் செலுத்தி கேள்விப்பத்திர ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் அனைத்தும் 23.06.2004 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், கேள்விச் சபை, வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய், மாங்குளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும்.

வேலை விபரம்

பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடம் 40'X 20' அமைத்தல்
மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தக்காரர் வேலைக்குரிய பிணைத் தொகையைப் பணமாக வலயக் கல்வி அலுவலகத்தில் 25.06.2004ஆம் திகதிக்கு முன் செலுத்தி உரிய ஒப்பந்தத்தை செய்து கொள்ள்ல் வேண்டும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

மா.தேவேந்திரன்,
தலைவர், வலயக் கல்விப் பணிப்பாளர்,
கேள்விச் சபை,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

(4707)

## 'யூரோ - 2004' கால்பந்துச் சுற்றுப்போட்டி

# இத்தாலி-டென்மார்க் போட்டி சமநிலையில்

# சுவீடன் அணிக்கு மகத்தான வெற்றி

ஐரோப்பிய கால்பந்து கிண்ணத்துக்கான போட்டித் தொடரில் நேற்று முன்தினம் C பிரிவில் இரண்டு போட்டிகள் நடைபெற்றன.

இதில் டென்மார்க் இத்தாலியை எதிர்த்தும், சுவீடன் பல்கேரியா அணியை எதிர்த்தும் மோதின.

டென்மார்க், இத்தாலி அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றபோதும் இரு அணிகளினதும் கோல்காப்பாளர்களின் அபார திறமையினால் எந்த அணியும் கோல் போட முடியாத நிலை ஏற்பட்டது.



டென்மார்க், இத்தாலிக்கு இடையேயான ஆட்டத்தின்போது வீரர்களின் ஆக்ரோசமான ஒரு கட்டம்.

மற்றுமொரு போட்டியில் சுவீடன அணி 5-0 என்ற கோல் எண்ணிக்கையில் பல்கேரியாவை வீழ்த்தி அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ள சுவீடன் அணி C பிரிவில் முதல் இடத்தில் உள்ளது.

# ஆசிய கனிஷ்ட பிரிவுத் தடகளப் போட்டி; அதிக பதக்கங்களுடன் சீனா முன்னணியில்

மலேசியாவில் நடைபெறும் ஆசிய நாடுகளின் கனிஷ்ட பிரிவு தடகளப் போட்டிகளில் சீனா முன்னணி வகிக்கின்றது. நேற்று முன்தினம் மதிய இடைவேளைக்கு முன்பு அவ்வணி 6 தங்கம்,4 வெள்ளி, 2 வெண்கலம் உட்பட 12 பதங்கங்களைப் பெற்றிருந்தது.

அடுத்ததாக யப்பான், கட்டார், ஆகியனவும் பதக்கங்களைப் பெற்றுள்ளன. யப்பான் 2 தங்கம், 5 வெள்ளி,ஒரு வெண்கலப் பதக்கங்களையும்; கட்டார் இரண்டு தங்கம்,இரண்டு வெள்ளி,ஒரு வெண்கலம் ஆகியவற்றையும் பெற்று மூன்றாம் இடத்தைப் பிடித்திருக்கின்றன.

தெற்காசிய நாடுகளில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தையும் பெற்று முன்னணி வகிக்கிறது. சிறிலங்கா ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பங்களாதேஷ் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளன. இதற்கிடையில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மலேசிய வீராங்கனை தங்கம் வென்றமை வரலாற்றில் முதன் முறையாகும்.



இங்கிலாந்தின் சில்வர்ஸ்டோனில் நடைபெற்ற சுப்பர் பைக் உலகக் கிண்ண உந்துருளி ஓட்டப் பந்தயத்தின் போது விபத்துக்குள்ளாகும் அவுஸ்திரேலியப் பந்தய வீரர் வோவிக் நல்லண்ட்.

# ஐந்தாண்டு இடைவேளைக்குப் பின்னர் இந்திய-பாகிஸ்தான் ஹொக்கிப் போட்டி

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உத்தியோகபூர்வமான ஹொக்கிப் போட்டி ஐந்து ஆண்டு இடை வேளைக்குப் பின்னர் மீண்டும் நடைபெறவுள்ளது.

இரு கட்டங்களாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் முதற்கட்டமாக இந்தியா, பாகிஸ்தானுக்குச் செல்கின்றது.

செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி கராச்சியில் ஆரம்பமாகும் முதல் போட்டியுடன் மொத்தம் நான்கு ஆட்டங்களில் இந்தியா விளையாடுகின்றது.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது.

அக்டோபர் நான்காம் திகதி டில்லியில் முதல் போட்டியும் அதனைத் தொடர்ந்து சண்டிகர்,ஹைதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களில் மூன்று போட்டிகளும் நடைபெறும் என்று இந்திய ஹொக்கி சம்மேளனத்தின் தலைவர் கே. பி.எஸ். கில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.




# குதிரைகளை வென்ற ஓட்டப்பந்தய வீரர் இங்கிலாந்தில் பரபரப்புப் போட்டி

இங்கிலாந்தில் மனிதர்களுக்கும் குதிரைகளுக்கும் இடையில் நடைபெற்ற ஓட்டப்பந்தயம் ஒன்றில் குதிரையைத்தோற்கடித்து லண்டன் வீரர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

இங்கிலாந்தின் வேல்ஸ் மாகாணத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 500 ஓட்டப்பந்தய வீரர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் 35கிலோ மீற்றர் தூரம் உள்ள பந்தயப் பாதையில் முதலில் மனிதர்கள் ஓட 15 நிமிடங்களின் பின் குதிரைகள் ஓடவிடப்பட்டன.

ஓட்டத்துக்குப் பயிற்சிபெற்ற குதிரைகளின் வேகத்துக்கு இணையாக வீரர்களும் ஓடினர். இறுதியில் நீண்டதூர ஓட்டப்பந்தயப் பாதையில், 2மணித்தியாலம் 5நிமிடங்களில் கடந்த சுனிலாப் என்ற லண்டன் வீரர் வெற்றி பெற்றார்.

இவர் பந்தய இலக்கை எட்டிய இரண்டு நிமிடங்கள் கழித்து குதிரை இலக்கை எட்டியது. இதன் மூலம் முதன் முதலாகக் குதிரைகளை வீழ்த்தி இந்த வீரர் வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு சுமார் 23 இலட்சம் ரூபா பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்பதில்லை முத்தையா முரளிதரன் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

உலகப் புகழ்பெற்ற சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட விடயம் காரணமாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முரளிதரன் நேற்று சிறிலங்கா கிரிக்கெட் தலைமையகத்துக்குச் சென்று தலைவர் மோகான் டீ சில்வாவிடம் தனது கடிதத்தைக் கையளித்துள்ளார்.

இதனை அடுத்து சர்வதேச கிரிக்கெட் துறையில் முரளிதரனின் இந்தத் தீர்மானம் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

சிறிலங்காவின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் பந்தை எறிவதாக அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் சில மாதங்களுக்கு முன்னர் குற்றம் சாட்டினார்.



இதற்கு முரளிதரன் கண்டனம் தெரிவித்ததுடன் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

இதனால் அவுஸ்திரேலியாவில் மிக விரைவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள சிறிலங்கா அணியில் முரளி பங்கேற்கமாட்டார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக சிறிலங்கா கிரிக்கெட்டுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சொந்தக் காரணங்களுக்காக தான் அவுஸ்திரேலியா செல்லும் சிறிலங்கா அணியில் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

இதற்கு சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இதனிடையே அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் விளையாடாமல் இருக்க முரளி மேற்கொண்ட முடிவு ஏமாற்றமளிப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் தலைமை நிர்வாகி கூறியுள்ளார்.

உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளராகவுள்ள முரளிதரனுடன் விளையாட வாய்ப்புக் கிடைக்காதது ஏமாற்றமளிப்பதாகவேயுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் அவுஸ்திரேலியா வரும் சிறிலங்கா அணியில் முரளிதரன் இடம்பெற வேண்டும் என மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



பெங்களூரில் தற்போது பயிற்சியில் ஈடுபட்டுவரும் இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு ஆலோசனை கூறும் முன்னாள் இந்திய அணித் தலைவரும், வேகப்பந்து வீச்சாளருமான கபில்தேவ்.

# சிறிலங்கா கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர்களாக முன்னாள் வீரர்கள்

சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு பயிற்சி வழங்கும் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் ஜோன்டைசன் மாற்றுவதற்கு சிறிலங்கா கிரிக்கெட் சபை ஆயத்தமாவதாக அறிவிக்கப்படுகிறது.

டைசன் கடந்த வருடம் சிறிலங்கா தேசிய கிரிக்கெட் அணிக்கு பயிற்சி வழங்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். இவரை மாற்றிவிட்டு முன்னாள் வீரர்களான ருமேஷ் ரட்ணாயக்க, றொய்டயஸ் ஆகியோரை இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளது சிறிலங்கா கிரிக்கெட் இவர்களிரு வரும் தற்போது வெளிநாடுகளில் பயிற்சியளித்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த யூன் மாதம் பயிற்சியளிக்க வந்தபோதும் சிறிலங்கா அணி இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் ஆடிய போட்டிகளில் பிரகாசிக்கத் தவறிவிட்டதும் இதற்குக் காரணமாகலாம் எனக் கூறப்படுகிறது.




கடந்த வாரம் தம்புள்ள ரங்கிரிய மைதானத்தில் நடைபெற்ற இரண்டு நாள் கடினப்பந்து கிரிக்கெட் பயிற்சியில் கலந்து கொள்ளச் சென்ற கிளிநொச்சி மகாவித்தியாலய 14 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணி வீரர்கள், பயிற்சியாளர், ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.

# கிளி.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி பரந்தன் ம.வி.யில்

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய் வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் 18,19,20ஆகிய திகதிகளில் கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் சம்பந்தமான விதிமுறைகள் யாவும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப் பெற்றுள்ளதெனவும், இவ் விதிமுறைகளுக்கமைவாகப் போட்டியாளர்கள் கலந்து கொள்வதற்கேற்ற நடவடிக்கைகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ளும் வண்ணமும் கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார்.

(சோ.கு)



## சிந்தனைக்கு

தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்வுக்கு மூலாதாரமானது; தனியரசு நிர்வாகத்திற்கு அத்திவாரமானது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-06-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

## தெளிவுபடுத்த வேண்டும்!

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இருப்பதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்ற அதேவேளை அண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதில் உள்ள முரண்பாடுகளைத்தீர்ப்பதில் கடந்த பல வாரங்களாகத் தாம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவும் சரி, அவரது சனாதிபதி செயலகமும் சரி, அரசாங்கத் தரப்பும் சரி சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதும், குழப்பமான தகவல்களை வெளியிடுவதும் வழமையானதொன்றாகிவிட்டது. இதன் விளைவானது சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து நம்பிக்கையீனம் ஆழமாக வேரூன்றி விட்டதொன்றாகி விட்டது. ஆகையினால் சமாதானப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்பாக சனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லாது விடில் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிப்பதென்பதும், அதில் முன்னேற்றம் காண்பதென்பதுமான விடயங்களில் மக்களிடம் இருந்து ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது சாத்தியப்பாடான தொன்றாக இருக்கமாட்டாது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்து அது தனது நிலைப்பாட்டைத் தெளிவாகவே முன்வைத்துள்ளது. இதைச் சர்வதேச சமூகமும் புரிந்துகொண்டுள்ளது. அதாவது அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை என்பது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்ததாகவே முதலில் இருக்கும்/ இருக்கவேண்டும் என்பதே அதன் நிலைப்பாடாகும்.
இவ்விடயத்தில் விடுதலைப்புலிகள் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளனர். இதே சமயம் தம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த நகல் திட்டம் குறித்து அவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக ஏற்கனவே அறிவித்துவிட்டனர். நோர்வேத் தரப்பிற்கு இதனை விளக்கிக் கூறியுமுள்ளனர்.

ஆனால் அரசாங்கத்தரப்பில் இது குறித்துத் தெளிவான நிலைப்பாடு இல்லை. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேரத்திற்கு நேரம் மாறுபட்ட கருத்துக்களைப் பேசுகின்றார். சந்திக்கும் நபர்கள், பேசும் இடம் என்பனவற்றைப் பொறுத்து அவரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது சந்திக்கும் நபர்கள், பேசும் இடம் என்பனவற்றிற்கு ஏற்பத் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்கின்றார். உதாரணமாகக் கூறுவதானால் தமிழர் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதானால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு ஆதரவாகப் பேசுகின்றார்,ஜே.வி.பி. மற்றும் பேரினவாத சக்திகளுடன் பேசுவதானால் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்பதற்கும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கும் மாறுபாடான கருத்தை வெளிப்படுத்துபவராக உள்ளார்.

இந்நிலையில் தற்பொழுதுள்ள கேள்வியானது சனாதிபதி சந்திரிகாவின் உறுதியான நிலைப்பாடு என்ன என்பதே? அதாவது சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசுவதற்குத் தயாராக உள்ளாரா? இல்லையா?என்பதே ஆகும். அவ்வாறானதொரு தெளிவான நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தாத வரையில் ஆகஸ்ட் மாதத்தில் பேச்சுவார்த்தை என அரசாங்கத்தரப்புக் கூறுவதும், நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகக் கூறுவதும் அர்த்தமற்றதொன்றாகும்.

ஏனெனில் அரசாங்கத் தரப்புடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்பாக மக்கள் மத்தியில் சமாதான முயற்சிகள் குறித்த நம்பிக்கை கட்டி எழுப்பப்படுதல் வேண்டும். யுத்த நிறுத்தம் கைச்சாத்தான காலத்திலும் அதையடுத்து வந்த சில மாதங்களிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வு பற்றிய நம்பிக்கை சற்று வளர்ச்சி கண்டு வந்தது. ஆனால் அது தற்பொழுது படிப்படியாகத் தளர்ச்சி கண்டு எதிர்க்கணிய நிலையை எட்டியுள்ளது.

ஆகையினால் அரசாங்கம் தற்பொழுது பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது குறித்து அறிக்கைகளை வெளியிட்டாலும், அரசின் மீதான நம்பிக்கை மக்கள் மத்தியில் சிதைவுற்றுள்ளதினால் சமாதானத்தின் மீதான நம்பிக்கைகளும் நலிவுற்ற நிலையிலேயே உள்ளது. இதனால் சமாதானப் பேச்சுவார்த்தைஆரம்பிப்பதற்கு முன்னர் அது குறித்து அரசாங்கம்-குறிப்பாக சனாதிபதி சந்திரிகா தனது உறுதியான நிலைப்பாட்டை வெளியிட வேண்டும். அதற்கேற்ப நடந்துகொள்ளவும் முற்பட வேண்டும். அவ்வாறு இல்லாது விடில் சமாதானப்பேச்சுவார்த்தைகள் குறித்த அறிவிப்புக்களில் எவரும் நம்பிக்கை கொள்ளப்போவதில்லை.

# யாழ்.குடாநாட்டில் நாளை இடம்பெறவுள்ள பேரணியில் அணிதிரள அறை கூவல்

நாளை யாழ். குடாநாட்டில் நடைபெறவுள்ள கண்டனப்பேரணியில் அணிதிரளுமாறு கோரி யாழ். மாவட்டத்தில் பல பொது அமைப்புக்கள் அறைகூவல் விடுத்துள்ளன. இப்பேரணியில் அணிதிரண்டு தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிக்காட்டுமாறு அவ்வமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு இரண்டு வருடங்கள் முடிவடைந்தும் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதில் இரண்டு வருடங்களுக்குள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு அரசுகளும் தவறிவிட்டது. பேச்சுவார்த்தை என்று தமது பதவிக் காலத்தை இழுத்தடிப்பதிலேயே சிங்களத் தலைமைகள் குறியாக இருந்து வருகின்றது. மறுபுறத்தில் வடக்குக்கிழக்கில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு இன்னும் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தாமல் அரசாங்கம் மக்களை ஏமாற்றி வருகின்றது.

இந்நிலையில் இயல்பு வாழ்க்கை, மீள்குடியேற்றம் போன்றவற்றை வலியுறுத்தியும், தமிழ்த்தேசப்பற்றாளர் படுகொலை, மலையக மக்கள் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைகளைக் கண்டித்தும் 17.06.2004 இல் நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் இணைந்து பேரணியை வெற்றிபெறவைப்பதென்பது இன்றுள்ள நிலையில் மிகவும் அவசியமும் எமது எல்லோரது கடமையுமாகும் என யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோரியுள்ளது. யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அழைப்பில் எமது மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்குத் தேவைப்படும் குறைந்த பட்சக் கோரிக்கையான இடைக்கால தன்னாட்சி அதிகார அலகை வழங்க மனமில்லாத சந்திரிகா அம்மையார் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குப் பேசித் தீர்வு காண்போம் வாருங்கள் என்கிறார்.

கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போன கதைபோலவே சந்திரிகாவின் சமாதானம்: அதே வேளை அவரின் ஆட்சியில் பங்காளிகளான ஜே.வி.பி தமிழர்களுக்கு எதுவும் இல்லை யுத்தத்தினால் அவர்களை அடிமைகளாக்குவோம் என்கின்றனர். அன்பும் கருணையும் காட்ட வேண்டிய புத்த துறவிகளோ, தர்மராச்சியத்தின் பேரால் தமிழரை அழிக்கச் சன்னதம் கொள்கிறார்கள்.

"சமாதானத்திற்கான யுத்தம்" செய்த சமாதானப் புறா சந்திரிகா அம்மையார் உதட்டளவில் சமாதானம் பேசி, திரைமறைவில் செய்வது என்ன?

இந்நிலையில் எமக்குச் சார்பாகக் கனிந்து வரும் சர்வதேச சூழலைப் பயன்படுத்தி எமது உரிமைப் போராட்டத்திற்குப் பலம் சேர்க்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனதும் தார்மீக கடமையாகும். எனவே, இடைக்காலத் தன்னாட்சி அலகை வழங்கு!, இயல்பு வாழ்வுக்கு வழிவிடு!, இடம்பெயர்ந்தோரை அவர்களின் இருப்பிடங்களில் வாழவிடு!, தமிழ்த் தேசியப்பற்றாளரைக் கொல்வதை நிறுத்து!,

மலைநாட்டுத் தமிழ்ச் சகோதரர்களைத் தாக்குவதை நிறுத்து!

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நாம் அனைவரும் ஓரணியில் திரண்டு பேரணியாகச் சென்று, சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் உரத்துச் சொல்வோம், உறைக்கச் செய்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட வெண்மை வாணிப சங்கங்களின் யாழ்.மாவட்ட ஒன்றியம் விடுத்துள்ள அழைப்பில்

* அண்மைக்காலங்களில் சந்திரிகா முன்வைக்கும் கருத்துக்களால், தமிழ் மக்கள் ஏமாறப்போவதில்லை. தேசிய விடுதலைப் போராட்டம் எமக்கு நிறையவே கற்றுத்தந்துள்ளது.
* தமிழ்த் தேசியமும், நமது ஏக பிரதிநிதிகளாக நாம் வரித்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளும், நிரந்தர சமாதானத்தின் பால் அதனை மேற்கொள்வதற்கான நியாயமான வழிமுறைகளை, பாதையைத் திறந்தே வைத்துள்ளனர்.
* தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கைக்கு சிங்களப் பேரினவாதம் ஏற்படுத்தியுள்ள நெருக்கு வாரங்கள் நீக்கப்பட வேண்டும்.
* நமது கடலில் நமது விளை நிலங்களில், நமது வீடுகளில் நாம் மீளவும் குடியேற வேண்டும், நமது ஜீவனோபாயத் தொழில்கள் சிறக்கவேண்டும்.
* மலையகத் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள், அரச ஒடுக்குமுறைகள் நீக்கப்படவேண்டும்.
* உண்மைகளை உரைக்கும் உத்தமர்களை, கருத்துச்சுதந்திரத்தை அதன் அடிவேர் வரையில் எடுத்துச்செல்லும் செம்மல்களை படுகொலை செய்வது நிறுத்தப்பட வேண்டும்.
* தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தணாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு, அமுலாக்கப்பட்டதன் பின்னரே நிரந்தர அரசியல் தீர்வுகுறித்துப் பேச வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள அறைகூவலில் போர் நிறுத்தம், புரிந்துணர்வு உடன்பாடு போன்ற ஆக்கபூர்வமான செயற்திட்டங்களைப் புறந்தள்ள சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களைக் குறைப்பதற்குப் புதிதாகப் பதவியேற்றுள்ள சிறிலங்கா ஆட்சியாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை இன்று வெளிப்படையாகத் தெரிகிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் கூர்மை அடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் எமது வாழ்வுரிமைகளை நிலைநாட்ட நாம் போராடித்தான் தீரவேண்டியுள்ளது. ஐந்து அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள கண்டனப் பேரணிக்கு கூட்டுறவாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என வேண்டுகின்றோம். அனைத்து கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள் தங்கள் தங்கள் பகுதியில் இதற்கான பணியில் முழுமையாக இறங்கி முழு மக்களையும் அணி திரட்டி கலந்து கொள்ளச்செய்யுமாறு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கேட்டுக்கொள்கிறது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெயவர்த்தனபுர மாணவன் கொலை சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் சம்பத் பண்டார கொலை தொடர்பாகச் சந்தேக நபர் ஒருவர் இனங்காணப் பட்டுள்ளார்.

கங்கொடுவெல நீதி மன்றத்தில் சாட்சியாளர்கள் முன்னிலையில் இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மாணவன் சம்பத் பண்டாரவின் கொலை தொடர்பாக நான்கு மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஜசிந்தகம்மத் என்ற மாணவன் நீதவான் திருமதி. விஜிதா திலகரட்ண தலைமையில் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது இனங்காணப்பட்டார்.

இந்த அடையாள அணிவகுப்பு மூன்று சாட்சிகள் முன்னிலையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## சிறுவர் பூங்கா விளையாட்டு விழா

முழங்காவில்-இரணைமாதா நகர், சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா -சிறுவர் கல்வி ஊட்ட மேம்பாட்டுப்பணியின் ஆறாம் ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பூங்கா மைதானத்தில் நடைபெறும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் லண்டன் கிளையின் அனுசரணையுடன் இப்பூங்கா நிர்வகிக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

நிலப்பரப்பில் 11.5 சதவீதமான பிரதேசங்கள் பாதுகாக்கப்பட, கடல்வாழிடத்தில் பாதுகாக்கப்படும் பகுதியின் அளவு 0.5 சதவீதத்துக்கும் குறைவாகவே இருக்கிறது.

# தனியார் மயமாக்கலுக்குப் பதிலாக ஐ.ம.சு. முன்னணி புதியதிட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுமுயற்சிகளைத் தனியார் மயப்படுத்தும் திட்டத்திற்குப் பதிலாக மாற்றுத்திட்டம்ஒன்றை நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது. தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக திறமுறை தொழில் முய்ற்சி முகாமைத்துவ முகவராண்மை என்ற அமைப்பிற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல தெரிவித்துள்ளார்.

நேற்று இது தொடர்பில் ஊடக மாநாடு ஒன்றை நடத்திய அவர் சனாதிபதியின் பரிந்துரையின் அடிப் படையில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலிட்டு வங்கி, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம், இலங்கை துறைமுக அதிகாரசபை, விமான நிலையங்கள், விமான சேவைகள் அதிகார சபை, இலங்கைப் புகையிரதம், இலங்கை போக்குவரத்து சபையும் பிராந்திய கொத்தணிப்பேருந்து நிறுவனங் களும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, அரச மருந்தாக்கல்சபை என்பன சுயாதீன வர்த்தக முயற்சிகளாக மாற்றப் படவுள்ளதாகக் கூறினார்.

பொது மக்களுக்கு அதிக நன்மைகள் கிடைப்பதை உறுதிப் படுத்தவும், தொழில் போட்டியை வலுப்படுத்தவும், இந்த முறையை சனாதிபதி தெரிவு செய்ததாக மனோ தித்தவெல தெரிவித்தார்.

குறிப்பிட்ட திறமுறை பொது முயற்சியாண்மையின் கீழ் விலையிடல், பொருட் கொள்வனவு, முதலீட்டு திட்டமிடல், ஆட்சேர்ப்பு போன்ற நோக்கங்கள் ஒருங் கிணைந்த விதத்தில் செயற்படுத் தப்பட வுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார். (32)

# புலிகள் - படையினர் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்குமான சந்திப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

மாதாந்தம் நடைபெறும் இந்தச் சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டு- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தளபதிகள் ரமணன், ஜனார்த்தனன் உட்பட ஐந்துபேர் கலந்து கொண்டனர்.இராணுவத் தரப்பில் 23ஆவது படைப் பிரிவு அதிகாரி பிரிகேடியர் வஜிர குணவர்த்தன தலைமையில் இராணுவ மற்றும் விசேட அதிரடிப் படை, பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த இரண்டு வார காலத்தில் குறிப்பிடத்தக்க வன்முறைச் சம்பவங்கள் நடைபெறவில்லையெனவும்,இதேவேளை, வாழைச்சேனைப் பகுதியில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் பற்றியும் மற்றும் ஓரிரு சம்பவங்கள் தொடர்பாகவும் உரையாடப்பட்டுள்ளது.

# இரப்பை, குடல் சார்ந்த நோய்களுக்கு சிகிச்சை

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையில் நோர்வே நாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் மருத்துவ நிபுணரால் இரப்பை, குடல் சார்ந்த நோய்களுக்கு சிகிச்சைகள் வழங் கப்படவுள்ளன. குறிப்பாக நெஞ் செரிவு, வயிற்றுநோ போன்ற வற்றினால் அவதிப்படுவோருக்கு குடற்புண்ணினைக்கண்டறியக்கூடிய நவீன கருவியின் உதவியுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை வழங்கப்படும்.

இன்று தொடக்கம் 20.06.2004 வரை காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை சிகிச்சை நடைபெறும். பயன்பெற விரும்பு வோர் வெளிநோயாளர் பகுதியில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

# காலாவதியான பொருட்கள் இனம் காணப்பட்டு அழிப்பு

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப்புலிகளின் நிதித் துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரும் பொது சுகாதாரப் பகுதியினரும் இணைந்து நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது கடைகளில் விற்பனைக் கிருந்த காலாவதியான உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த 12 ஆம் நாள் விசுவமடு, தருமபுரம் ஆகிய பகுதிகளில் அமைந் துள்ள விற்பனை நிலையங்களில் நடத்தப்பட்ட இச்சோதனை நடவடிக்கையின் போது காலாவதியாகிய நிலையிலும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களான ஜாம் போத்தல் கள், குழந்தைகளுக்கான உணவுப் பொருட்கள், சொக்லேட் வகைகள் பிஸ்கற்வகைகள், இனிப்பு வகைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டு அழிக் கப்பட்டன. (சோ)

## நோர்வேத்...

சமாதான முன்னெடுப்புக்களில் ஒரு வித தேக்க நிலை உருவாகியிருக்கும் நிலையில் நோர்வேத் தரப் பினரின் வருகை முக்கியத்துவம் பெறுகிறது. (லோ)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

உலக சுற்றாடல் தினத்தை யொட்டி 21.06.2004ஆம் திகதி நடைபெற இருந்த மாவட்ட மட்டத்திலான கருத்தரங்கு அன்றையதினம் நடை பெற மாட்டாது எனவும் , மேற்படி கருத்தரங்கு 22.06.2004ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.9.00 மணிக்கு கலாசார மண்டபத்தில் நடைபெறும் எனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அறியத்தருகிறார்.

# "தரைமீன்கள்" சிறுகதைத்தொகுதி நேற்று சிறப்புற வெளியீடு



"தரைமீன்கள்" சிறுகதைத் தொகுதி நூல் நேற்று தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளரினால் வெளியிட்டுவைக்கப்பட்டது.

வைத்தியர் ச.முருகானந்தன் அவர்களால் எழுதப்பட்ட 'தரை மீன்கள்' எனும் சிறுகதைகளின் தொகுதி நூல் வெளியீட்டு நிகழ்வு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறையைச் சேர்ந்த முரளி ஏற்றிவைக்க மங்கல விளக்கினை சிவானந்தம், கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் வைத்தியர் கா.சுயந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் வரவேற்புரையினை வே.பரமநாதபிள்ளை வழங்க, வெளியீட்டுரையினைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். தொடர்ந்து தரைமீன்கள் சிறுகதைத் தொகுதி நூலினை தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர். சோ. தங்கன் அவர்கள் வெளியிட்டு வைக்க, கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களும், வைத்தியர் சத்தியமூர்த்தி, க.முருகேசு ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

அத்தோடு நாட்டுப்பற்றாளர் பொன். விநாயகமூர்த்தி அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட "இது எங்கள் தேசம் நூல் தொகுதி"் வழங்கப்பட்டது. இதனை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வழங்க, பொன். விநாயகமூர்த்தியின் துணைவியார் திருமதி. விநாயகமூர்த்தி பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து தரைமீன்கள் நூல் நோக்கு இடம்பெற்றது. இதனைச் செல்வி மணிமேகலை அவர்கள் வழங்கினார். நூலாசிரியர் ச.முருகானந்தனின் ஏற்புரையினை அடுத்து நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.இந்நிகழ்வில் ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (லோ,ச)

## நாளைய...

இடங்கள் தொடர்பாக நேற்று ஏற் பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

நான்கு அம்சக் கோரிக்கையினை முன்வைத்து யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் இக்கண்டனப்பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளமை அறிந்ததே. (27)

## வீதியால்...

சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலு ராஜேந்திரன் (வயது -58) என்பவரே பலியானவர் ஆவார்.

மன்னாரிலிருந்து மதவாச்சிக்குச் செல்லும் வாகனங்கள் மக்கள் அதிகமாக வாழும் இப்பகுதியிலும் கூட வேகமாகச் செல்வதே விபத்துக்கள் ஏற்படக் காரணம் எனத் தெரிவிக் கப்படுகிறது. (21)

## மன்னாரில்...

யில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக் கப்பட்டிருந்தது.

இதேவேளை சிறிலங்காப்படையினரின் தாக்குதலால் காயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அருணராசா நவநீதன் (வயது-29) என்பவரை யாழ். மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரி விக்கப்படுகின்றது. (மி)

## குடும்பஸ்தர்...

ளிக்காத நிலையில் நேற்று அதி காலையே கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை கிளிநொச்சி காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கந்தன் தம்பிப்பிள்ளை (வயது 54) என்ற 11 பிள்ளைகளின் தந்தையே மதுபோதையில் கிணற்றில் விழுந்து மரணமானவராவார்.

மேற்படி நபர் ஆறுமாதங்களின் முன்பும் தற்கொலை முயற்சியினை மேற்கொண்டு காப்பாற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## மனிதாபிமான...

எமது தாயகப் பிரதேசத்திலே மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற ஐ.நா. அமைப்புக் களையும், தொண்டர் ஸ்தாபனங் களையும் அழைத்து இன்றைய நிலைப்பாடுகள் சம்பந்தமாக கலந் துரையாடியிருக்கின்றோம். இங்கே முக்கியமாக எமது மக்களுக்கு முன்னெடுக்கப்படுகின்ற மனிதாபிமானப் பணிகளை ஒருங்கிணைத்து முன்னெடுப்பதும், இங்குள்ள மக்களின் உள்ளூர் ஸ்தாபனங் களுடன் இணைந்து எமது மக் களுக்கு நன்மையளிக்கக் கூடிய வகையில் அவர்களின் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராய்ந்திருக்கின்றோம். எமது தாயகத்தில் முக்கியமாக முன் னெடுத்துச் செல்லப்பட வேண்டிய மனிதாபிமானப் பணிகளை எந்த வகையில், எப்படியான ஒழுங்கு முறையில் முன்னெடுத்துச் செல்வது என்பது சம்பந்தமாக கலந்துரையாடும் சந்திப்பாகவேதான் இன்றைய சந்திப்பு இருந்தது.

☐ அவர்கள் வட-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப் படும் வேலைத் திட்டங்களை அதிகரிப்புச் செய்வதாக உங் களுக்குத் தெரிவித்தார்களா?

சர்வதேச அரச சார்பற்ற நிறு வனங்கள் ஏற்கனவே இங்கு மனிதாபிமானப் பணிகளைக் குறிப்பிட்ட அளவில் மேற்கொண்டு வருகின்றன. அவற்றைச் சீரான முறையில் எமது மக்களுக்குக் கொண்டு செல்கின்ற வகையில் எமது திட்டமிடலை அபிவிருத்திக் கான செயலகம் மேற்கொள்ள இருக்கிறது என்பதையும் அதன் செயற்திட்டத்தை விளக்குவதற்காக வுமே அவர்களை அழைத்திருந் தோம்.

☐ இப்போது வழங்கப்படும் நிதியைவிடக் கூடுதலான நிதி எதையும் வழங்குவதற்குச் சம்மதித்திருக்கின்றார்களா?

இதில் நிதி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை நாம் அழைக்க வில்லை. அவர்களை எதிர்காலத் தில் தான் அழைத்துப் பேச இருக் கின்றோம். இதில் முக்கியமாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங் களும், ஐ.நா. அமைப்புக்களும் மாத்திரமேதான் கலந்து கொண்டன. அவர்களால் இங்கு ஏற்கனவே, முன்னெடுக்கப்படுகின்ற மனிதாபி மானப் பணிகள், அவற்றை உள் ளூர் அமைப்புக்களுடன் இணைந்து முன்னெடுத்துச் செல்கின்ற வகை யில் அதற்கான ஒரு செய்ற்திட் டத்தை அமைக்கும் நோக்குடன் தான் இன்றைய கலந்துரையாடல் நடைபெற்றது. நிதி, உதவித் திட் டங்களை அதிகரிப்பதோ, குறைப் பதோ சம்பந்தமான தீர்மானங் களை எடுக்கின்ற சந்திப்பாக இது இல்லை.

☐ சமாதான நடவடிக்கைகள் தற்போது எந்த நிலையில் காணப்படுகின்றன?

இது சம்பந்தமாக பல தடவை கள் நாம் தெரியப்படுத்தியிருக்கின் றோம். இது பற்றி நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டும் என்றில்லை. இன்று சமாதான முன் னெடுப்புக்கள் எல்லாம் ஒரு முடக்க மான, கேள்விக்குறியான நிலைக் குள் தள்ளப்பட்டிருப்பதை எல் லோரும் அறிவர் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் ஆரம்பமான இச்சந் திப்பு 1.10 மணி வரை நீடித்தது.

வடக்கு-கிழக்கில் மனிதாபிமான வேலைத் திட்டங்களை முன்னெ டுத்து வரும் 24இற்கும் மேற்பட்ட நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மேற்படி சந்திப்பில் தமிழீழ விடு தலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், துணை அர சியல்துறைப் பொறுப்பாளர் சோ. தங் கன், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன், அரச சார்பற்ற நிறுவனங்களின் விடு தலைப்புலிகளின் இணைப்பாளர் தியாகராஜா, விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன், சிறான் திட்டப் பணிப் பாளர் இரேனியல் செல்வின் உள் ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (லோ,ச)

## மீன்பிடிப்....

பினூடாக வடமராட்சி கிழக்கு கடற் பரப்பிற்கு செல்ல வேண்டியுள்ளது இந் நிலையில் அவ்வாறு மீன் பிடியில் ஈடுபட்ட பின்னர் வட மராட்சி வடக்குப்பகுதிக்குத் திரும்பிக் கொண் டிருந்த படகுகள் மீதே நாகர் கோவில் படைத்தளத்தின் கரை யோரக் காவலரண்களில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

எனினும் மயிரிழையில் தப்பித் துக்கொண்ட படகுகள் ஆழ்கடலில் அலைக்கழிந்த நிலையில் மாலை வடமராட்சி வடக்குப் பகுதியை வந்தடைந்துள்ளன. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.